புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=
பக்கங்கள் 24
11 மே 2019
புதுமை : 03 விதி : 153

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# முள்ளிவாய்க்கால் நம் கடமை என்ன?





வவுணதீவுப் படுகொலை அம்பலப்படுத்திய உண்மைகள்



ஹிஸ்புல்லாவுக்கு பிறந்த ஞானம்



உணவு மூலம் கருத்தடை சாத்தியமா...?



ஆண்கள் மூலம் குட்டி ஈனும் விலங்கு

# உணவு மூலம் கருத்தடை சாத்தியமா...?

மருத்துவர்
சிவச்சந்திரன் சிவஞானம்

ஓர் இனத்துக்காக குரல் கொடுப்பபது என்பதில், அந்த இனத்தவர் எவ்வளவு அறிவு சார்ந்தவர்களாக தங்களை வெளிக்காட்டிக் கொள்கிறார்கள் என்பதும் அடங்கும்.

குழந்தையே பெற்றுக்கொள்ள முடியாத மாத்திரைகள் கைப்பற்றப்பட்டிருக்கிறதாம். அதை நம் சந்தியில் நின்று சைட் அடித்து தமிழீழம் பெற நினைக்கும் பேஸ்புக் போராளிக் குஞ்சுகளும் பகிர்ந்து தள்ளுகின்றன. நீங்கள் மண்டைக் குள்ள ஒன்றுமில்லாம மொக்குத் தனமா எழுதிறத பார்த்தா மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? நீங்க இனத்துக்கு ஏதும் செய்யவேண்டுமென்றால் பாசிபிடித்த மூளையோடு ஒன்றும் பேசாமால் இருப்பதே பெரிய உதவியாக இருக்கும்.

சரி...! இப்படி பவுடர் அல்லது மாத்திரை போட்டு கருத்தடை ஏற்படுத்த முடியுமா?

ஆண்கள் பயன்படுத்தும் கருத்தடை மாத்திரை இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. அதை யாரும் கண்டுபிடித்தால் இப்படி கள்ளத்தனமாக விற்க வேண்டிய தில்லை. ஒழுங்ககாக 'கொப்பி றைட்ஸ்" எடுத்து விற்றாலே ஒரு மாதத்தில் அவர் உலகப் பணக்காரர் ஆகலாம்.



## தமிழினம் அறிவு சார் இனமாக வளர்வது எப்போது?

நோபல் பரிசும் நிச்சயம்.

பெண்களுக்கு இப்படியான மாத்திரைகள் மூலம் கருத்தடை ஏற்படுத்த முடியுமா?

அவ்வாறு ஏற்படுத்துவது என்றால் அந்தப் பெண் ஒவ்வொரு நாளும் அந்த மாத்திரையை எடுக்க வேண்டும். அதை உட்கொள்வதை நிறுத்தினால் அடுத்த நாளே அவர் கருத்தரிக்கக்கூடிய நிலையை அடைந்துவிடுவார்.

நிரந்தரமாக கருத்தடை செய்ய சத்திர சிகிச்சையே ஒரே வழி. அப்படி நிரந்தரமாக கருத்தடைசெய்யும் மாத்திரைகளை கண்டுபிடிப்பவர், நிச்சயம் பில்கேட்ஸை விட பெரும் பணக்காரர் ஆகிவிடுவார்.

**கண்டுபிடிக்கப்படும் மாத்திரைகள் எவை?**

1. வலி நிவாரணியாக பயன்படுத்தும் மாத்திரை. அதன் இரசாயன உள்ளடக்கம் ஹெரோயினுக்கு ஒத்தது. ஆகவே அதை போதைவஸ்தாகவும் பயன்படுத்தலாம். அதனால் அவை ஒசுசலவில் மட்டுமே கிடைக்கும். அங்கே வைத்தியரின் சிட்டை இல்லாமல் ஒரு மாத்திரைகூட வாங்க முடியாது. இந்தியா போன்ற நாடுகளில் இதை எவரும் வாங்கலாம். ஆகவே அங்கேயிருந்து இதை களவாகக் கொண்டு வந்து போதை மாத்திரையாக விற்கிறார்கள்.

இந்த மாத்திரை ஒன்றின் விலை 3 ரூபாய். ஆனால் மார்க்கெட்டில் 200 ரூபாய்க்கும் மேல் களவாக விற்கிறார்கள். இவை அதிகமாக பிடிபடுபவது முஸ்லிம்களிடமிருந்து. அதை எழுதுங்கள். பாடசாலை மாணவர்களிடையே இப்படி போதைப் பழக்கம் பெருக முஸ்லிம்கள் பெரும் காரணமாக இருப்பதை சுட்டிக்காட்டுங்கள். **(இதுவரை இப்படியொரு மாத்திரை முஸ்லிம் அல்லாத** ஒருவரிடம் கைப்பற்றப்பட்டதாக ஒரு செய்தியும் நான் பார்க்கவில்லை. பாகிஸ்தானில் இவை இலகுவாகக் கிடைப்பதும் காரணமாகலாம்).

2. கருக்கலைப்பு மாத்திரை - இந்த மாத்திரைகள் மருத்துவ ரீதியாக கருக்கலைப்புக்காகவும், வேறு சில காரணங்களுக்காகவும் பயன்டுத்தப்படுகின்றன. இவையும் எல்லாப் பார்மஸியிலும் இலகுவில் கிடைக்காது. இதையும் திருட்டுத்தனமாக கொண்டுவந்து சட்டவிரோத கருக்கலைப்புக்கு பயன்படுத்துகிறார்கள். ஒரு மாத்திரை 15 ரூபாய் என்றாலும் வெளியில் பல ஆயிரங்களுக்கு விற்கிறார்கள். கருக்கலைப்பு செய்வதற்கு இந்த மாத்திரை உட்கொள்ளவேண்டிய ஒரு முறை உள்ளது. அதை சுவைதெரியாதபடி ஒருமுறை உட்கொள்ளும் உணவோடு சேர்த்துக் கொடுத்து கருக்கலைப்புச் செய்ய முடியாது.

இந்த மாத்திரை கடத்தலிலும் அடிக்கடி முஸ்லிம்களே பிடிபட்டாலும் உள்ளூரில் இந்த மாத்திரையை சட்டவிரோத கருக்கலைப்புக்குப் பயன்படுத்துபவர்கள் தமிழர்கள்.

இந்த இரண்டு மாத்திரைகள் பிடிபட்டதும்தான் தமிழினத்தின் சனத்தொகை குறைவதற்கு **இவைதான் காரணமென்று எழுதித் தள்ளுகிறோம். நம்முடைய சனத்தொகை** குறைவதற்கான காரணம் நாம்தான் அவற்றை பிறிதொரு கட்டுரையில் எழுதுகிறேன்.

சில படித்த மனிதர்களே இப்படியான பொய்ச் செய்திகள் மூலமாவது முஸ்லிம் கடைகளுக்கு ஆட்கள் போவதைத் தடுப்போம் என்கிறார்கள். முஸ்லிம் கடைகளுக்கு தமிழர்கள் போகவேண்டாமென மூச்சுமுட்டப் பேசுபவர்களும் பின்னேரமானால் முஸ்லிம் ஹொட்டல்களில் கொத்து வெட்டுவதை கண்டிருக்கிறேன்.

சிலர் சில இரசாயனங்களின் பெயரை கூகுளில் தேடி அவை கருத்தடைக்கு பயன்படுத்தப்படலாமென எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவை நஞ்சுகள். கொஞ்சம் கொஞ்சமாக உணவிலே கலந்து நீண்ட காலத்துக்குக் கொடுத்தால், அவை ஆளின் உயிருக்கே உலை வைத்துவிடும். ஓஷோவும் இப்படித்தான் ஜெயிலில் இருக்கும்போது கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. இப்படியான இரசாயனங்கள் எதுவும் இதுவரை பிடிபடவில்லை.

தமிழர்கள் அதிகமாக வாழும் இடத்தில் வியாபாரம் சார்ந்த பொருளாதாரம் முஸ்லிம் வசம் போகின்றதேயென்ற கவலை எனக்கும் உள்ளது. அதற்கான காரணங்களை அலசி, முஸ்லிம்களோடு போட்டிபோட்டு வியாபாரச் சந்தையை நம் வசப்படுத்துவது எப்படி என்று பல கட்டுரைகள் எழுதியுள்ளேன். அவற்றைப் பின்பற்ற யாரும் தயாரில்லை. அந்தக் கட்டுரைகளை கிட்டத்தட்ட 10 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் இணையத்தளங்களால் பகிரப்பட்டன. நம்முடைய இணையத்தளங்கள் இன்னும் தமிழினத்தை அழிக்கும் மாத்திரைகளை வைத்திருந்த முஸ்லிம்கள் கைது என்ற அதிர்ச்சித் செய்தியை மட்டும் பகிர்ந்துகொண்டிருக்கின்றன. உங்களுக்கும், நல்லூரில் இருந்த முஸ்லிம்களை பன்றித்தலை போட்டு சோழ மன்னன் துரத்தினான் என்று சொன்னவனுக்கும் வித்தியாசமில்லை.


உங்களுக்குக் காலமெல்லாம் ஒரு சில ஊடகங்கள்தான்.

நாம் முன்னேறவேண்டும். அதற்கு அறிவுசார்ந்த இனமாக சிந்திப்போம், பேசுவோம், எழுதுவோம்.

# புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 11 மே 2019 | விதி : 153

## சீனாவிலும் முஸ்லிம்கள் மீது கண்காணிப்பு நடவடிக்கை

சீனாவில் காலத்துக்கு காலம் முஸ்லிம் அடிப்படை வாதத்தை உருவாக்கவும் முஸ்லிம்களின் பேரால் குழப்பங்களை மேற்கொள்ளவும் மேற்குலக உளவு நிறுவனங்களும் ஊடகங்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் சீனா உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து அவற்றிலிருந்து நாட்டை பாதுகாத்து வந்தது.

அங்கு பள்ளிவாசல்களை நிறுவவோ வழிபாடுகளை நடத்தவோ பூரண சுதந்திரம் உண்டு. ஆனால் மதம் பரப்பும் நடவடிக்கைகளையோ, மதத்தின் பெயரால் உப நிறுவனங்களை நடத்துவதையோ அனுமதிக்கப்படுவதில்லை. அண்மைக்காலங்களில் ஐ.எஸ். ஐ.எஸ் நடத்தி வரும் உலகளாவிய பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக சீனா தனது நாட்டில் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அங்கு எட்டு அம்சங்களைக் குறிப்பிட்டு அவை தொடர்பாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவற்றில் மூன்று அம்சங்கள் மிக முக்கியமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

அயலவர்களுடன் பழகாதவர்கள், முன் கதவுகளை எப்போதும் பூட்டி வைத்து விட்டு பின் பக்கத்தைப் பயன்படுத்துபவர்கள், கைபேசி பாவிக்காதவர்கள் என மூன்று தரப்பினரும் முக்கியமாக அவர்களறியாதவாறு கண்காணிக்கப்படுகின்றனர். வெளிப்படையில் தங்களைத் தாங்கள் தனிமைப்படுத்துபவர்கள் தொடர்பாக அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவுள்ளனர்.

> வெள்ளம் வருமுன் அணை கட்டினால் பள்ளக் காணியெண்டாலும் பாதுகாக்கலாம்

# அரசின் மீது நம்பிக்கையிழந்த அதிமேற்றிராணியார்

கொழும்பு மாவட்டப் பேராயர் அதிமேற்றிராணியார் வணக்கத்துக்குரிய மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசியல்வாதிகள் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற பேரழிவைத் தங்கள் அரசியல் இலாபங்களுக்குப் பயன்படுத்த முனைகின்றனரே ஒழிய நியாயபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரியவில்லையென நீர்கொழும்பில் வைத்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே அவர் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இச்சம்பவத்தில் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும் வெடிபொருட்களை நாட்டுக்குள் கொண்டு வர உதவி செய்த அரச அதிகாரிகள் இனங்கண்டு தண்டிக்கப்பட வேண்டுமெனவும், இதனை மேற்கொண்டவர்கள் மனிதர்களல்லர் எனவும் எந்த மதமும் இப்படியான விடயங்களை அனுமதிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய குழுக்களின் நடவடிக்கைகள் போல் இதுவும் போய் விடுமோ எனச் சந்தேகம் தெரிவித்த அவர் அரசின் நடவடிக்கைகள் மீது திருப்தி இல்லையெனவும் தெரிவித்தார்.



கத்தோலிக்க மக்கள் தங்கள் குருவானவரைத் தங்கள் தந்தையாகவே கருதுவர். அவரும் மக்களைத் தனது பிள்ளைகளாகவே கருதுவார். பிள்ளைகளை இழந்த தந்தையின் வலியை அரசியல்வாதிகளால் புரிந்துகொள்ள முடியுமா?

> பெற்றவர் வயிறு பற்றி எரியுமாம்: மற்றவர் மனசு ஒப்புக்கு ஒப்பாரியாம்

# கேட்டது விடுதலை கிடைத்தது பதவி விலக்கு




அண்மையில் யாழ். பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதையடுத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவரும் செயலாளரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைது செய்யப் பட்டமைக்குக் கூறப்பட்ட காரணம் சிற்றுண் டிச்சாலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தியாகி திலீபன் ஆகியோரின் படங் கள் காணப்பட்டமை எனக் கூறப்படுகிறது.

தற்சமயம் அவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சட்டமா அதிபர் அனுமதியளித்தால் மட்டுமே அவர்களைப் பிணையில் விட முடியும். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டவாளருமான சுமந்திரன் சட்டமா அதிபருடன் பேச்சுகளை நடத்தியுள்ளார். பல்வேறு தரப்பினரும் மாணவர்களை விடுவிக்கும்படி கோரி வருகின்றனர். ஆனால், மாணவர்கள் விடுவிக்கப்படுவதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரன் ஜனதிபதியால் திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுவரை காரணம் எதுவும் கூறப்படவில்லை. மாணவர்கள் குற்றவாளிகள் என்றால் அதற்கான தார்மீப் பொறுப்பு உபவேந்தருக்கு உண்டு என்ற வகையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டி ருக்கலாம் எனச் சிலர் கருத்து வெளியிட்ட னர். அப்போது ஒரு பெரியவர் அண்மை யில் நாட்டில இடம்பெற்ற குண்டு வெடிப் புக்களுக்கு நாட்டின் தலைவர் என்ற வகையில தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகுவாரா எனக் கேள்வி எழுப்பினார்.

> தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி தார்மீக ஆட்சியில் அதுதான் நியதி

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்




































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## நினைவேந்தல் குழப்பங்களை தீர்க்க நடவடிக்கை அவசியம்

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்றது. இதனால், முப்படைகளிடமும் அதிகாரங்கள் குவிந்தது மட்டுமல்ல, வீதிக்கும் வந்து விட்டார்கள். தமிழர் தாயகத்தில் இவ்வாறான படைப் பிரசன்னம் நமக்குப் புதிதில்லை. ஆனாலும், 'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை" என்ற பெயரால் இப்போது மக்களின் இயல்பு வாழ்வை படைகள் கேள்விக்குறியாக்கி விட்டார்கள்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரும், செயலாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தனைக்கும் அவர்கள் செய்த குற்றம்? - தலைவர் பிரபாகரன், தியாக தீபம் திலீபன் ஆகியோரின் படங்களை வைத்திருந்தனர் என்பதே. இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு எதிராக தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பாதிக்கிறது. எனவே அவர்களை சமாதானம் செய்யும் நோக்கிலா தமிழர்கள் மீதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பாய விட்டுள்ளார்கள் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளுது.

மாணவர்களின் விடுதலை இடியப்ப சிக்கல் நிலையில் இருக்கையில், முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நெருங்கியுள்ளது. இலங்கை அரசினதும் - படைகளினதும் இன வெறிக்குக் கொத்துக் கொத்தாகப் பலியான இடத்தில் தம் உறவுகளை நினைத்து உருகவும் - அவர்களின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கவும் – உறவுகளுக்காகக் கண்ணீர் விட்டு அழுது தம் துன்பத்தைப் போக்கும் ஒரு வடிகாலாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

2015 வரை - அதாவது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி வரை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கு இதற்கு ஒருவகையில் காரணமாக சொல்லப்பட்டாலும், முப்படைகளின் வசமிருந்த அதிகாரக் குவிப்பும் இதற்கு ஒரு காரணம். முள்ளிவாய்க்காலில் மக்கள் கூடவும், நினைவேந்தல்களை செய்யவும் படைகள் அனுமதிக்கவேயில்லை. பின்வந்த நாள்களிலும் படைகளும் - பொலிஸாரும் நினைவேந்தல்களுக்கு தடைகள் ஏற்படுத்த முனைந்தனர். ஆனால் நீதிமன்றங்களின் துணையுடன் மக்கள் தங்களின் உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

இப்போது, மீண்டும் அதிகாரங்கள் படைகளிடம் குவிந்துள்ளன. பல்கலைக்கழக மாணவர்களை குறி வைத்துப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்தது போல, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் நேர்ந்து விடுமோ என்ற அச்சம் மக்களிடம் எழுந்துள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தாக்குதல்கள் குறித்தும் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இத்தகைய சூழலில் தங்கள் உறவுகளுக்காக மக்கள் ஒன்றுகூடி கண்ணீர் விட்டு அழவும் - ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நம் பிரதிநிதிகளும் – அரசாங்கமும் செய்ய வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 50

- வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா

'எல்லாம் எல்.ரீ.ரீ.யால வந்தது", என அவனது கண்டுபிடிப்பைக் கூறியபோது அவனது சிந்தனை தவறு என நிரூபித்து நியாயப்படுத்தும் துணிவு அப்போது என்னிடம் இருக்கவில்லை. வெறும் அமைதியை மட்டும் அணிந்து கொண்டேன். வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் உள்ளுணர்வில் சிங்களவர்கள் வெற்றிக்களிப்பில் மிதந்தபோது அதை தவறென சொல்லி நிரூபிப்பதால் எனக்கு வரும் ஆபத்தை எண்ணிப் பயந்தேன்.

நள்ளிரவு தாண்டியும் பயணம் தொடர்ந்தது. நின்று நின்று பயணிக்கும் பேருந்தில் இருந்து இறங்கினோம். பேருந்துக்குள் இருப்பதைவிட வெளிப்புறக் காற்று நன்றாக இருந்தது. பலர் நாட்கணக்கில் குளிக்காதிருந்ததால் ஏற்பட்ட துர்மணம் பிணவாடையை நிகர்த்திருந்தது. அதிலிருந்து தப்பிக்க பேருந்தை விட்டு இறங்கியது நன்றாக இருந்தது.

பலரும் தத்தமது பேருந்து இலக்கத்தை நினைவுபடுத்திக் கொண்டு பல காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர். சிலர் வீதியோரக் கற்களை அடுப்பாக்கி தேநீர் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியிருந்தனர். பேருந்துக்குள் அடைந்து கிடக்க வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை. இரவோடு இரவாக பலர் மனித கழிவகற்றும் உபாதையை பல காலத்தின் பின் நெருக்கடியில்லாமல் முடித்துக்கொண்டனர். விடியல் பொழுது நெருங்கிக் கொண்டிருந்தது. தம்மிகவின் பேருந்து இரண்டு முப்பதைக் காட்டியது.

பலர் பேருந்தில் தூங்கிக்கொண்டிருந்தனர். வீதியோரமாக மின்குமிழ் வெளிச்சம் பொருத்தப்பட்ட கிணற்று நீரில் சிலர் குளித்துக் கொண்டிருந்தனர். எங்கள் குடும்பமும் பேருந்தை விட்டிறங்கியது. காயப்பட்டவர்களையும் குழந்தைகளையும் குளிக்க வைத்து காவலுக்கு இருத்தி விட்டு ஆசை தீர நீராடினோம். உடைகளையும் துவைத்துக் கொள்ள முடிந்தது. வெக்கைக்கு குளித்தது குழந்தைகளுக்கும் சுவாத்தியமாக இருந்திருக்க வேண்டும். சிணுங்கல் அணுங்கல் இல்லாமல் அமைதியாக இருந்தார்கள். பேருந்துக்குள் ஏறி இருந்தபோது நித்திரை அடித்து அணைத்துக்கொண்டது.

காலை நான்கு மணிப் பொழுதில் தான் அந்த அனர்த்தம் நடந்தது. யாருமே எதிர்பார்க்காத அனர்த்தம். பேருந்து நீண்டநேரம் தரித்து நிற்பதும் பின் சற்றுத்தூரம் நகர்ந்து கொண்டிருந்ததாலும் பலர் பேருந்தை விட்டு இறங்கி வீதியோரங்களில் காலாற உறங்கவும் தொடங்கினர். பேருந்து புறப்படும் போது ஒருவரை ஒருவர் தட்டியெழுப்பி பேருந்தில் ஏறிக்கொண்டனர்.

பெண்கள் பலர் இராணுவத்துக்கு அஞ்சி பேருந்துக்கு கீழ்ப்பகுதியில் பாதுகாப்பாக உறங்கினர். அப்படித் தான் யாருமற்று வந்த அந்த யுவதியும் பேருந்தின் கீழ் உறங்கியிருக்கிறாள். பேருந்து புறப்படும்போது தட்டி எழுப்பினரா இல்லையா எனத் தெரியவில்லை.

படீர் என்ற சத்தத்தோடு அவளது தலை சுக்குநூறானது. இராணுவ வாகனம் வந்து அவளது உயிரற்ற உடலைக்காவிச்சென்றது. யார் பெற்ற பிள்ளையோ? எப்படியும் உறவுகளைச்சென்றடைவேன் என்ற அவளது கனவை கனவாக்கியது நித்திரை என்ற சத்திராதி. அவளது நிலைமை யாவரையும் உறுத்தியது. அதன் பின் முடிந்தளவு ஒருவரோடு ஒருவர் தம்மை அறிமுகம் செய்யத் தொடங்கினர்.

அதிகாலை பொன் ஒளியுடன் புலர்ந்தது. கானகத்தால் எழுந்து புல்வெளியில் படரும் சூரியக்கதிர்களின் ஒளிக்கீற்றுக்கள் பார்வைக்கும் மனதுக்கும் ஒரு புதுச்சுகத்தைத் தந்தன. குண்டுச் சத்தமில்லாத குருவிகளின் இசையோடு மலர்ந்த ஒரு புதிய அதிகாலைப்பொழுதை எனது மகளின் விழிகள் முதன் முதலாகப் பார்க்கின்றன. முள்ளுக்கம்பி வேலிகள் அடைக்கப்பட்ட விசாலமான பசுமைப் பரப்பில் மேய்ச்சல் மந்தைகளாக ஓட்டிச் செல்லும் பிறழ்வின் மிகு அவலத்தை அவள் உணரப்போவதில்லை.

சிந்திக்கத் தெரியாது குழந்தைகள் போலிருப்பது எவ்வளவோ மேல் என்பதை அவளது குதூகலிப்பு கூறிநின்றது. சாப்பாடும் தூக்கமும் என தமது உலகத்தை வகுத்துக் கொண்ட மனிதர்களுக்கும் இந்தக் குழந்தைக்கும் என்ன வித்தியாசம் வந்துவிடப் போகிறது? ஆங்காங்கு வெள்ளைக் கொக்குகளும் நாரைகளும் வயல்கரைகளில் பூத்திருந்த நீர்நிலைக்குள் ஒற்றைக்காலூன்றி கடுந்தவம் புரிந்தன. சில கொக்குகள் இரை கிடைத்ததும் இலாவகமாகக் கௌவிக்கொண்டு வேகமாகப் பறந்து மறைந்தன. அந்த் வயல்புற நீர்நிலைகளில் பூத்திருந்த மலர்களே கொக்கின் வஞ்சகமுகத்தின் சாட்சிகளாக இருக்க முடியும். கொக்கின் சிறகுகளின் வண்ணம் கண்டு அருகில் சென்ற மீன்களுக்குத்தான் தெரியும் கொக்கிற்கு கூரிய அலகுகளும் இருந்தகதை. அதன் அறியாமையாலேயே சித்திரவதையும் உயிர் அழிவும் என்பதை இறந்த மீன்கள் உணர்ந்திருக்கும். இயற்கை நிகழ்வுகூட இறுதிப்போரும் இப்படித்தான் என்பதை அந்தக்காட்சிகள் ஒப்பீடு செய்தன.

குழந்தை கையை அசைத்து ஏதேதோ மொழிகளை வாயசைத்து சொல்வது இரசனையாகவே இருந்தது. கிணறுகளுக்கு பக்கத்தில் குளித்தது பாதி குளிக்காதது பாதியாக பலர் அடிபடுவதிலும் வாய்த் தகராறிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நல்ல காலம் குளிரைப் பொருட்படுத்தாமல் நள்ளிரவில் எங்களைப்போல குளித்தவர்கள் நிலை இவ்வளவு கீழ்நிலைச் செயலுக்கு தள்ளவில்லை. சண்டையும் வாய்த்தகராறும் பொதுக்கோபத்துக்கு வரலாம். தனிப்பட்ட மனிதர்களில் வருவது நாகரிகமாக எனக்குத் தோன்றுவதில்லை.

(சாட்சியம் நீளும்)

CMYK

# வவுணதீவு படுகொலை அம்பலப்படுத்திய உண்மைகள்

■ யோகநாராயணன்


கடந்த வருடம் வவுணதீவு காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய புலனாய்வுப் பிரிவினர் இரு முன்னாள் போராளிகளைக் கைது செய்தனர். இவர்களில் ஒருவர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டு திருமணம் காரணமாக கிளிநொச்சி வட்டக்கச்சியில் வசிக்கும் அஜந்தன் என அழைக்கப்படும் இராசகுமாரன் என்பவராவார். இவர் மாவீரர் நாளைக் கொண்டாட மட்டக் களப்புக்கு வந்தார் எனவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தபோது, பொலிஸாருக்கும் அவருக்கும் முறுகல் ஏற்பட்டதாகவும் அதற்குப் பழிவாங்கும் முகமாகவே அவர் இப்படுகொலையில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டே கைது செய்யப்பட்டார். அவரும் அவருடன் கைது செய்யப்பட்ட இன்னொரு முன்னாள் போராளியும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், கடந்த உயிர்த் தெழுகை நாளில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புக்களுக்கும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகளுக்குமான பிரதான சூத்திரதாரியின் சாரதி அண்மையில் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் வவுணதீவுப் பொலிசார் படுகொலையைத் தாங்களே செய்ததாகவும் அதே துப்பாக்கியாலேயே அமைச்சர் ஹபீர் காசிமின் செயலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

எனவே, தற்சமயம் வவுணதீவுப் படுகொலைக்கும் முன்னாள் போராளிகளுக்கும் எவ்வித சம்மதமுமில்லை. எனினும் அவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அவர்களை விடுவிக்கும்படி ஜனாதிபதியிடம் அமைச்சர் மனோ கணேசன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன் வைத்தும் அவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அவர்கள் மீது வேறு சில குற்றச்சாட்டுக்களைப் புதிதாக முன்வைத்து தடுத்து வைக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

எப்படியிருந்த போதிலும் அநீதியான முறையில் இரு போராளிகளும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மை தற்சமயம் அம்பலப்பட்டு விட்டது. இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட விடயமானது தவறுதலாக இடம்பெற்றதா அல்லது திட்டமிட்ட வகையில் வேறு ஏதோ ஒரு உள்நோக்கத்துடனோ அல்லது தேவையுடனோ திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

உயிர்த்தெழுகை நாளில் தேவாலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் குண்டுதாக்குதலை நடத்திப் பல நூறு உயிர்களைப் பலியெடுத்த கொடூரத்தை நடத்திய தேசிய தௌபீக் ஜமாத் என்ற அமைப்புத் தான் என்பது விசாரணைகள் மூலம் உறுதி செய்யப்பட்டு விட்டது. ஒவ்வொரு இடங்களிலும் தாக்குதல்களை நடாத்திய இந்த அமைப்புக்களைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரிகளும் அடையாளப்படுத்தப்பட்டு விட்டனர்.



இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற ஒரு ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த 28 பேருக்கு புலனாய்வுப் பிரிவினரால் உளவு வேலை செய்வதற்கென மாதாந்த ஊதியம் வழங்கப்பட்டதாகவும் அது பற்றிய ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதிலிருந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் ஜமாத் அமைப்பினருக்குமிடையே மிகவும் நெருக்கமான உறவு இருப்பது தெரிய வந்துள்ளது.

அப்படியானால் வவுணதீவுப் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பாக அது இடம்பெறுவதற்கு முன்பாகவோ அல்லது இடம்பெற்ற பின்போ தெரிந்திருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. மேலும் இச் சம்பவம் தொடர்பாக தௌபீக் அமைப்பின் மீது சந்தேகம் ஏற்படாமற் செய்யவே, அப்பாவிகளான முன்னாள் போராளிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டதா? இல்லையேல் புலிகள் மீண்டும் மீளெழுச்சி பெறுகின்றனர் என நம்பவைப்பதற்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் திட்டப்படியே தௌபீக் ஜமாத் அமைப்பினர் இக் கொலையை மேற்கொண்டனரா?

அடிப்படையில் வவுணதீவுப் படுகொலை தொடர்பாக எவ்வித உள்நோக்கமோ, கபடமான வழிகாட்டலோ இன்றி நேர்மையாக விசாரணை நடத்தப்பட்டு உண்மையான குற்றவாளியை இனம் கண்டு கைது செய்திருந்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்கும். அப்படுகொலைக்கும் தௌபீக் ஜமாத் அமைப்புக்கும் இடையேயுள்ள தொடர்பு அறியப்பட்டிருந்தால் அந்த அமைப்பின் தாக்குதல் திட்டங்கள்கூட வெளிவந்திருக்க முடியும் அதனால் உயிர்த்தெழுகை நாளில் இடம்பெற்ற பேரவலத்தைத் தடுத்திருக்க முடியும்.

இப்படியான நிலையில் நேர்மையான விசாரணைகள் மூலம் மேற்படி உண்மைகள் கண்டுபிடிக்கப்படுமா? இப்படியான நடவடிக்கைகளின் மையம் எது? இவற்றை இயக்கும் சூத்திரதாரி அல்லது சூத்திரதாரிகள் யார்? தேசிய தௌபீக் அமைப்பு முஸ்லிம் அடிப்படைவாதத்தைக் கொள்கையாகக் கொண்டு ஏனைய இலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புக்களுடன் மோதல்களையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இந்த அமைப்பின் உறுப்பினர்களில் 26 பேருக்கு புலனாய்வுப் பிரிவு மாதந்தக் கொடுப்பனவு வழங்கியது. வவுணதீவு படுகொலை மேற்கொள்ளப்படுவதற்காகக் கொலையாளிகளுக்கு 4 இராணுவ அதிகாரிகள் தகவல்களை வழங்கினர் என வெளிவந்த தகவலில் உண்மையுண்டா? இக்கொலை தொடர்பாக முன்னாள் போராளிகள் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளமை உண்மையான குற்றவாளிகளைத் தப்ப வைக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட திசை திருப்பும் நடவடிக்கையா?

இக்கேள்விகளுக்கெல்லாம் விடை காண நேர்மையான எவ்வித தலையீட்டுக்கும் உட்படுத்தப்படாத விசாரணைகள் மேற்கொள்ளப்படுமானால் அரச படைகள் மத்தியிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் ஜமாத் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணையாகச் செயற்பட்டவர்களும் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களும் கண்டு பிடிக்கப்பட்டுத் துடைத்தழிக்க முடியும். ஆனால், அப்படியான விசாரணை இடம்பெறுமா என்று சந்தேகப்படுமளவுக்குச் சிலர் கருத்து வெளியிட்டமையைக் கவனத்தில் எடுக்காமல் விட முடியாது.

இச்சம்பவம் நடைபெற்றவுடனேயே எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச சில முக்கிய புலனாய்வாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தமையால் புலனாய்வுத்துறை முடக்கப்பட்டதாலேயே குண்டு வெடிப்புக்களை முன் கூட்டியே அறிந்து தடுக்க முடியாமல் போனதெனக் குற்றம் சாட்டியிருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவத்தினரதும், புலனாய்வுப் பிரிவினரதும்

(19ஆம் பக்கம் பார்க்க)

# ஹிஸ்புல்லாவுக்குப் பிறந்த ஞானம்



■ நோக்கன்

உரோமாபுரி பற்றி எரிகிறது என்று மக்கள் கூச்சலிட்டுக் கொண்டு ஓட, அமைதியாக இருந்து பிடில் வாசித்தானாம் மன்னன் நீரோ- என்பது போல இருக்கிறது ஹிஸ்புல்லாவின் கதை.

அஸ்ரப் இருக்கும்போது இவர் HIS புல்லாஹ்வாக இருந்தவர். அவர் இறப்புக்குப் பின்னர் அஸ்ரப்பின் மனைவி பேரியல் அஸ்ரப் கட்சித் தலைவராக இருக்கும்போது HER புல்லாஹ்வாக இருந்தவர். தற்போது IS புல்லாஹ்வாக மாறி இருக்கிறார். தற்போது முஸ்லிம் மக்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகச் செயற்படுகிறார் இவர் என்று நம்பப்படுகிறது.

பயங்கரவாதத்துக்குள் அகப்பட்டுச் சின்னாபின்னப் பட்டுக் கொண்டிருக்கிறது தேசம். பயங்கரவாதத்தால் பல உயிர்கள் காவு கொள்ளப் பட்டுவிட்டன. பல கோடி ரூபா வருமானத்தை இந்த நாடு இழந்திருக்கிறது. தேடுதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பயங்காரவாதத்துக்குத் துணை போனவர்களும், துணை போகாத வர்களும், பயங்கரவாதம் என்றால் என்னவென்று அறியாத வர்களுமாகப் பலர் சந்தேகத்தின் பேரில் கைதாகிக் கொண்டிருக்கி றார்கள். இதனால் நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

2009 இற்குப் பின்னர் இராணு வத்தைப் பொது இடங்களிலி ருந்து விலக்க வேண்டும் என்பதற்காகப் பல போராட்டங் கள் நடைபெற்றன. சிறுகச் சிறுக அரசு அதனை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்க... சில நிமிடங்களில் முஸ்லிம் பயங்கரவாதிகளால் பல பொது வான இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலினால் நாடு சீர்கெட்டுப் போய் யுத்த காலத்தை ஒத்ததாக எமது நாடு மாறி இருக்கிறது. எனவே இதி லிருந்து பயங்கரவாதிகளின் நோக்கமும், அவர்கள் பின்னணி யிலுள்ளவர்களது அரசியல் செயற்பாடும் நன்கு புரியும்.

எந்தவித நியாயமான கோரிக் கைகளும் அவர்களிடம் இல்லை என்பதை உலகம் நன்கு புரிந்திருக்கிறது. எனவே ஒரு சமயத்தின் பேரால் நடத்தப் படும் இது போன்ற உயிர் கொலைகளை நியாயப்படுத்த லாமா? அப்படிப்பட்ட பயங்கர வாதத்தையும், பயங்கரவாதிகளை யும், அவற்றின் பின்னால் இருந்து செயற்படுகின்ற அரசியல் சுயநலமிகளையும் உடன் கைது செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். அதை விட்டு அரசியல் லாபத்துக்காகவும், ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்ற பயத்தினாலும் நடவடிக்கை எடுக்க அரசு தவறினால்... எதிர்காலத்தில் நிலைமை இன்னும் இதைவிட மோசமானதாக இருக்கும் என்ற கருத்தைப் பலர் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய நெருக்கடி மிக்க நாட்களை மிகவும் பயத்தோடு மக்கள் கடந்து கொள்ள இந்தநாட்டில் எதுவுமே நடைபெறாததுபோல தற்போது காணப்படும் சூழ்நிலைக்குச் சம்பந்தமில்லாத ஒன்றைப் பற்றி ஹிஸ்புல்லா பேசி இருப்பது நகைச்சுவையான விடயமாகத் தெரியவில்லையா? இல்லை ஞானசார தேரரிடம் சிங்கள மக்கள் காட்டாத அக்கறையைக் காட்டி "குட்போய்" என்று சிங்கள மக்களிடம் சிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெறமுனைகிறாரா?

கடந்த ஈஸ்ரர் தாக்குதலின் பின்னர் சிங்கள மக்கள் மட்டு மல்ல எந்த இனத்தவரானாலும் சரி உங்களுக்குக் குட் போய் என்ற பட்டத்தை வழங்கப் போவ தில்லை என்பது உறுதி.ஏனெனில் உங்கள் பக்கத்தில் நியாயமில்லை என்றது ஒரு புறமிருக்க, மதத்தின் பெயரால் மனித உயிர்களைக் காவு கொண்டிருக்கிறீர்கள். கொன்று குவித்திருக்கிறீர்கள். தேவாலயங்களில் பிரார்த்தனை களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வர்கள்மீது மத்தின் பெயரால்

தாக்குதல்களை நடத்தியிருக்கி றீர்கள். எந்தவகையில் இதை நியாயப்படுத்தப் போகிறீர்கள்?

அது மட்டுமல்ல தற்போது காணப்படும் சூழ்நிலையில் ஹிஸ்புல்லாமீது மக்கள் பலத்த சந்தேககங்களை கொண்டிருக்கின்றனர். பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னால் அவர் ஆதரவுண்டு என்ற கருத்தும் பல அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அவர் இனத்தவரே அவர் மீது சேற்றை வாரி இறைத்துக் கொண்டிருக்க... அவரையே யார் பிணை எடுப்பது என்ற சூழ்நிலை தோன்றியிருக்க... அவர் ஞானசாரருக்குப் பிணை கேட்டுக் கொண்டிருக்கிறார். வேடிக்கையான விடயமிது. இதை, தான் ஒரு இன நல்லிணக்கத்தின் அடிப்படையிலேயே கேட்பதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.

தற்போது காணப்படும் இத்தகைய நெருக்கடிமிக்க காலகட்டத்தில் ஹிஸ்புல்லா ஏன் இப்படி ஞானசாரர் மீது அனுதாபம் கொள்ளுகிறார் என்று கேட்டால்... ஒரு சிறு குழந்தைகூடச் சரியான பதிலைச் சொல்லிவிடும். நாட்டு வழக்கில் சொல்லப்போனால் "ஹிஸ்புல்லா சனத்தைப் பேக்காட்டப் பாக்கிறார்" என்றும். சொல்லலாம்.

ஞானசாரரை கூண்டுக்குள் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது வெளியே விடுவதா? என்ற விடயத்தைத் தீர்மானிக்கப் பலர் இருக்கிறார்கள். அவர்களின் பின்னால் ஓர் அரசியலுண்டு. அரசியல் கட்சி உண்டு. அமைச்சர் பலர் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எனவே ஞானசாரருக்கு வக்காளத்து வாங்க வேண்டிய தேவை யாருக்கும் இல்லை. ஞானசார தேரருக்குச் சிங்கள மக்களிடம் இல்லாத ஆதரவையா ஹிஸ்புல்லா கொடுத்துவிடப் போகிறார்.


ஞானசார தேரரின் விடுதலை நல்லிணக்கத்தை ஏற்ப்படுத்துமாம். ஹிஸ்புல்லா சொல்லி இருக்கிறார். ஏற்றுக் கொள்ளுவோம். நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவரின் கருத்தை ஏற்றுக் கொண்டால் தற்போது இலங்கையில் நல்லிணக்கம் இல்லாது போயிருக்கிறது என்றுதானே அர்த்தம். அந்த நல்லிணக்கம் இல்லாது போனதுக்குக் காரணமானவர்கள் யார்? அந்தப் பொறுப்பை முதலில் ஹிஸ்புல்லா ஏற்க வேண்டும். முஸ்ஸிலிம் மதத் தீவிரவாதிகளே குண்டை வெடிக்க வைத்து அந்த நல்லிணக்கத்தைக் கேள்விக் குறியாக்கியவர்கள். குண்டு வெடித்த காட்சிகளும், மனித உடலங்கள் சிதறிச் சின்னாபின்னப்பட்டு சுருவங்களிலும், சிலுவைகளிலும் இரத்தக்கறைகளை ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

குண்டு வெடிப்பு இடம்பெற்ற தேவாலயச் சுவர்களில் தசைத் துண்டுகள் ஒட்டிக் கிடந்த காட்சிகளை ஒளிப்படங்களின் மூலம் மக்கள் பார்த்திருக்கிறார்கள். எனவே அத்தகைய கறைகள் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் தாக்கத்தை ஏற்ப்படுத்தி இருக்கிறது. அந்தக் கறைகளுக்கு ஒத்தடம் கொடுப்பதை விட்டுவிட்டு, அவர்களோடு நல்லிணக்க முயற்சிகளை ஏற்ப்படுத்துவதை விட்டுவிட்டு, அவர்களுக்கு ஆறுதலளிக்கின்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதை விட்டுவிட்டு, ஹிஸ்புல்லாவுக்கு ஞானசார தேரர் மீது ஞானம் வரக்காரணம் என்ன? அந்த மர்மத்தை யார் அவிழ்க்கப் போகிறார்கள்?

தௌஹீத் ஜமாத் அமைப்பு செயற்பட்ட அத்தனை விதமும் ஹிஸ்புல்லாவுக்கு நன்கு தெரியும். அவரிடம் உரிய முறையில் விசாரணையை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் அரசாங்கத்தை வலியுறுத்தி இருக்கிறார். மட்டக்களப்பில் இஸ்லாமியர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சோதனைகள் சரியான முறையில் இடம்பெறவில்லை என்றும், தீவிரவாதிகள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதற்கான வாய்ப்புகள் அதிகளவில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

எனவே பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் எனில் முதலில் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின்புலமாக உள்ளவர்களது விபரங்கள் ஆராயப்பட வேண்டும். அவர்களுக்கு இவ்வளவு தொகையான பணம் யாரிடமிருந்து, எங்கிருந்து வந்திருக்கிறது? என்ற விபரத்தையும் விசாரணைகளின் மூலம் வெளிக் கொண்டு வர வேண்டும். அடுத்ததாக இந்த அமைப்புக்குப் பின்னால் இருக்கின்ற அரசியல் பிரமுகர்கள் மற்றும் பணத்துக்காக விலைபோனவர்கள் என்ற விபரங்களைப் பட்டியலிட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முக்கியமாகக் ஹிஸ்புல்லா போன்றவர்களையும் விசாரித்து அவர்கள் நிரபராதிகள் என்று காணும் பட்சத்தில் அரசு அதனை அறிவித்து மக்கள் சந்தேகங்களைப் போக்கட்டும். அப்போது ஹிஸ்புல்லா கொண்ட அனுதாபம் ஏன் என்று மக்களுக்கு புரிந்துவிடும்? ●

# தேடும் கண்கள்



**செம்மார்பு குக்குறுவான்**
படம் : சோபன்ராஜ்



**மீன்கொத்தி**
இடம் : முல்லைத்தீவு
படம் : ம.சாந்தமேனன்



## நெடுங்கால் உள்ளான்

ஆங்கிலம் : Black-winged Stilt
உயிரியல் : Himantopus himantopus

இப்பறவை நீர் நிலைகளுக்கு அருகில் வாழும் கரைப் பறவைகளுள் ஒன்று.

கறுப்பு வெள்ளை நிறத்தில் காணப்படும் இந்தப் பறவையின் கால்கள் இளஞ்சிவப்பு (பிங்க்) நிறத்தில் காணப்படும். இந்தக் கால்களைப் பயன்படுத்தியே தமது இரையைத் தேடுகின்றன.


நீளக் கால்களைக் கொண்ட இந்தப் பறவை கரையோரத்திலேயே எப்போதும் காணப்படும். ஆனால், ஆபத்தான சூழல் ஏற்படும்போது நீரில் மூழ்கி நீந்தும்.

கூட்டமாக வசிக்கும் இந்தப் பறவை. தங்கள் கூட்டை தண்ணீருக்கு அருகிலேயே அமைக்கிறது. தன் எல்லைக்குள் எந்தப் பறவையையும் அனுமதிக்காது. மீறி நுழைபவற்றை சத்தம் எழுப்பி விரட்டிவிடும்.

கோடைகாலத்தில் இனப்பெருக்கம் செய்யும் இந்தப் பறவைகள் முட்டையிட்டு அடைகாக்கும். இப்பறவைகள் பொதுவாக தம் இடத்தை விட்டு இடம்பெயர்வதில்லை. ஆனால், தண்ணீர் வற்றி விட்டால் வேறு இடம் தேடிச் செல்லும். இலங்கையின் சதுப்பு நிலப் பிரதேசங்களில் பொதுவாக இந்தப் பறவையைக் காண முடியும்.



**அணில்**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம்: சுபாசினி அமரக்கோன்



**தேன்சிட்டு**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : ஜெயதீஸ்



**அணில்**
இடம் : கல்வியங்காடு
படம் : ஆதவ்

# வாரபலன்

### மேடம்
இவ்வாரம் பொருளாதார நிலைமை சீராக இருக்கும். தீயோர் சேர்க்கையைத் தவிர்க்க வும். குடும்பத்தில் மதிப்பு உயரும். உத்தியோகஸ்தர்களு டன் மேலதிகாரிகள் சற்று கடுமையாக நடந்து கொள்வார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல் சுமுகமாக முடியும்.

### ரிஷபம்
இவ்வாரம் பழைய கடன்கள் வசூலாகும். தேக ஆரோக்கியம் கூடும்.வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்கவும். உத்தியோ கஸ்தர்களுக்குச் சிறந்த வாரம். வியாபாரிகள் புதிய கடன்களை வாங்கி வியாபாரத்தைப் பெருக்க வேண்டாம். கலைத்துறையினருக்கு இது சாதகமான காலம்.

### மிதுனம்
இவ்வாரம் சமூகத்தில் உங்கள் மதிப்பு உயரும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். ஆடை ஆபரணங்கள் சேரும். உத்தியோகத் தர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு உண்டாகும்.

### கடகம்
இவ்வாரம் திறமைகள் பளிச்சிடும். பொருளாதாரச் சூழல் நன்றாக இருக்கும். எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி அடை யும். மதிப்பு மரியாதைகள் அதிகரிக்கும். சோம்பேறித்தனத்தைத் தவிர்க்கவும்.

### சிம்மம்
இவ்வாரம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். உறவினர்களிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் . முன்னேற்றம் காண்பர். வியாபாரிகளுக்கு உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும்.

### கன்னி
இவ்வாரம் பணப்புழக்கம் சரளமாக இராது. புதிய கடன் வாங்க நேரிடலாம். நெருங் கியவர்களுடன் விரோதம் ஏற்படவாய்ப்புள்ளது. வாகனப் பயணத்திலும் கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் முயற்சிக்குத் தகுந்த லாபத்தைப் பெறுவார்கள்.

### துலாம்
இவ்வாரம் அனைத்து முயற்சிகளிலும் பலன் கிடைக் கும். குடும்பத்தில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண் டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு குறையும். வியாபாரிகளுக்கு கொடுக் கல் வாங்கல்கள் லாபகரமாக முடியும்.


### விருச்சிகம்
இவ்வாரம் வாழ்க்கையில் சிறு சலிப்புகள் ஏற்பட்டாலும் விரைவில் அதிலிருந்து விடு படுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். மற்ற வர்களுக்கு வாக்குக் கொடுப்பதையோ, பிணை போடுவதையோ தவிர்க்கவும்.

### தனுசு
அளவுக்கு மீறிய யோசனை களில் ஈடுபடுவதைத் தவிர்க் கவும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கூடும். கடந்த சில காலங்களாகத் தொடர்ந்து வரும் பிரச் சினைகளிருந்து விடுபட்டு புதிய மாற்றம் காண்பீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் சுமுகமாகவே முடியும்.

### மகரம்
இவ்வாரம் உங்கள் காரி யங்கள் நேர்த்தியாக முடிவடை யும். குடும்பத்தில் நின்று போயிருந்த சுப நிகழ்ச்சிகள் நடக்கும். குடும்பத்தினருடன் அமைதியாகப் பொழுதைக் கழிப்பீர்கள். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து சுபச் செய்திகள் வரும்.

### கும்பம்
இவ்வாரம் பொருளாதாரத் தில் முன்னேற்றம் தென்படும். கவலைகள் குறையும். செலவு களை அதிகரிப்பதால் சிக் கனத்தை மேற்கொள்ளவும். உடல்நலத்தில் கவனம் செலுத்தவும். எதிர்பாராத குழப் பங்கள் வந்துசேர வாய்ப்பு இருப்பதால் எச்சரிக்கை தேவை.

### மீனம்
இவ்வாரம் செய்யும் செயல்களில் முன்னேற்றம் தென்படும். வெளியிடங்களிலி ருந்து இனிய செய்திகள் வந்து சேரும். சேமிப்புகள் பல மடங்காகும். உத்தியோகஸ்தர்கள் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க நினைப்பீர்கள்.





அட்சய திருதியை நன்னாளில் யாழ். நகரில் நகைக் கடைகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.




குப்பிழான் வட பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமானபோது...



தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினர் குருதிக் கொடை முகாம் நடத்தியவேளை...

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தொடர் தாக்குதல்களில் பலியானவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.



ஊடகவியலாளர் ரூபனின் 9 ஆவது நினைவு நிகழ்வு அண்மையில் பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் இடம்பெற்றபோது...

# ஆந்தைகளின் மொழி

அக்பர் பீர்பால் கதைகள்

அன்று காலை, அக்பரைப் பார்த்தஉடனேயே அவர் அன்று என்ன செய்ய நினைக்கிறார் என்று பீர்பாலுக்குத் தெரிந்து விட்டது. குதிரைச் சவாரிகேற்ற உடையை அவர் அணிந்திருந்தார். வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வேறு எங்கும் பார்க்காமல் ஆயுதங்களின் மீதே மிகவும் கவனமாக இருந்தார்.அக்பர் அன்று வேட்டையாடத்திட்டமிட்டிருக்கிறார் என்று பீர்பால் புரிந்து கொண்டார். வேட்டையாடுவது அக்பருக்கு மிகவும் பிடித்தப் பொழுதுப் போக்கு! ஆனால் அவர் வேட்டைஆடுவது பீர்பாலுக்குப் பிடிக்கவில்லை. அதை எப்படித் தடை செய்வது என்பதைப் பற்றியே அவர் சிந்திப்பார்.சற்று நேரங்கழித்துத் தன் கவனத்தை ஆயுதங்களிலிருந்து விடுத்து, பீர்பாலின் மீது செலுத்திய அக்பர் "நான் இன்று என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?" என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டதும், "மற்றவர்களின் மனத்திலுள்ளதை அறிந்து கொள்ளும்



திறமை எனக்குக் கிடையாது" என்றார் பீர்பால்.

"பொய் சொல்லாதே, பீர்பால்! நான் என்ன செய்யப் போகிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே தெரியாதது போல் நடிக்கிறாய். மிதமான குளிர்வீதம் இந்தக் காலைப் பொழுதில் வேட்டைஆடச் சென்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து! உன் கருத்து என்னவோ?" என்றார். "தங்களின் கருத்தே என்னுடைய கருத்தும்!" என்றார் பீர்பால். "அப்படியானால், நீயும் என்னுடன் வேட்டையாட வர வேண்டும்!" என்றார் அக்பர்...... (மீதி அடுத்த வாரம்)


# அறிவோம் உயர்வோம்

## முதல் பிரதமர்




இலங்கையின் முதலாவது பிரதமரும் இலங்கையின் தேசத்தந்தையுமான டி.எஸ்.சேனாநாயக்க 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நீர்கொழும்பில் பிறந்தார்.ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றிய அவர் பின்னர் பௌத்த மதத்திற்கு மாறினார். தனது இளமைக் கால கல்வியினை கொழும்பு சென்ட். தோமஸ் கல்லூரியில் பயின்றார்.1931 ஆம் ஆண்டு மினுவாங்கொட பிரதேச சபையின் ஊடாக மாநில அவைக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மை காணி அமைச்சராக பதவியேற்றார். 1946 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனாநாயக்க அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியினை ஸ்தாபித்தார். அதற்கமைய கடந்த 1947 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற முதலாவது தேர்தலில் வெற்றிபெற்று இலங்கையின் முதலாவது பிரதமராக பதவியேற்றார். கடந்த 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி காலி முகத்திடலில் குதிரைச் சவாரியில் இருந்த போது தவறி விழுந்து உயிரிழந்தார்.

# கங்காரு



மிகவும் வினோதமாக ஒரு விலங்கு என்று பார்த்தால் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த கங்காருவைச் சொல்லலாம். அவுஸ்திரேலியாவில்தான் இவை காணப் படுகின்றன. இவ்விலங்கின் மடியில் ஒரு பை காணப்படுகிறது. இப்பையில் இவை தங்கள் குட்டியைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன

குட்டிகள் பால் அருந்துவதற்கான முலையும் இந்தப் பையினுள்ளேயே இருக்கின்றது.கங்காருக்களில் 56 இனங்கள் இருக்கின்றதாம்., பெரிய கங்காரு 90 கிலோ வரை எடையிருக்கும், வாலிலிருந்து மூக்கு வரை 10 அடி நீளமிருக்கும். ஆபத்து காலத்தில் மணிக்கு 48 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும்.இரண்டு மீட்டர் உயரமும், 6 மீட்டர் நீளமும் ஒரே மூச்சில் தாண்டவல்லது. பிறக்கும் போது கங்காரு குட்டியின் நீளம் ஓர் அங்குலமே இருக்கும்

# கேள்விக்கென்ன பதில்?

1. கரம் விளையாட்டின் துவக்கத்தில் எத்தனை கருப்பு காய்கள் இருக்கும்?
2. பிறக்கும் போது குழந்தையின் மூளையின் நிறை என்ன?
3. ராகங்கள் மொத்தம் எத்தனை?
4. அணு சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ள நாடு எது?
5. உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப்படுவது?

விடைகள்

1. ஒன்பது 2. 350கிராம் 3. 16
4. அமெரிக்கா 5. போதிச மரம்

# அறிந்துகொள்வோம்

1. ஈசலுக்கு வயிறும் ஜீரண உறுப்பும் இல்லை
2. குதிரை நின்றபடிதான் தூங்கு கின்றது
3. சிங்கத்தின் இதயந்தான் காட்டு மிருகங்களுள் சிறியது.
4. ஒட்டகச் சிவிங்கியின் நீண்ட கழுத்தில் ஏழு எலும்புகள் உள்ளன.
5. முதலை தூங்கும்போது கண்களை மூடுவதில்லை

# ஆங்கிலம் கற்போம்

## How To Use Capital Letters




1. ஒரு வாக்கியத்தின் ஆரம்பத்தின் முதல் எழுத்து எப்பொழுதும் கெப்பிட்டல் எழுத்தாகவே இருக்கவேண்டும். (Capital letters are always used at the beginning of a sentence.)

உதாரணம்:
The car is running
I am looking for a job.
He doesn't understand.
Are you speaking in English?
Where are you going?

2. கிழமை, மாதம், பெயர், ஊர், நாடு, மொழி, மதம், போன்றவற்றை எழுதும் பொழுது அதன் முதல் எழுத்தை கட்டாயம் கப்பிட்டல் (Captial) எழுத்திலேயே எழுத வேண்டும். இவை வாக்கியத்தின் மத்தியில் வந்தாலும் அப்படித்தான்.

கிழமைகள்: Sunday, மாதங்கள்: January
பெயர்கள்: Sarmilan, Kavitha,
ஊர்கள், நகரங்கள்: Jaffna, Colombo நாடுகள்: Japan மொழிகள்: Tamil, English, Chinese, மதங்கள்: Islam, Buddhism ஆங்கிலத்தில் "நான்" என்று குறிப்பதற்கு எப்போழுதுமே கப்பிட்டல் "ஐ" யை மட்டுமே பயன்படுத்த வேண்டும். (சிறிய "i" பயன்படுத்துவதில்லை)

# பழமொழியும் தவறான பிறர் மொழியும்



- **அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்**

அடி என்பது ஔவையாரின் நாலடியாகும். அந்த நாலடி நூல் உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள் என்பதே இப்பழமொழியின் உண்மை அர்த்தம். நாமோ நாம் கொடுக்கும் அடிக்குத்தான் சரியாக செயல்படுகிறது என்று நினைக்கிறோம்.

- **நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு**

சந்தையில் மாட்டை வாங்கும்போது அது பதிக்கும் தடம் சுவடு. அழுத்தமான சுவட்டை பதிக்கும் மாடே அதிக பலம் வாய்ந்தது. ஒரு சுவட்டை பார்த்தாலே மாட்டின் பலம் புலனாகும். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது தவறானது.



# ஒடியல் பிட்டு

ஈழத் தமிழரின் தனித்துவமான - பாரம்பரிய உணவுகளில் ஒடியல் பிட்டு அல்லது புட்டு மிக முக்கியமானது. காய வைக்கப்பட்ட பனங்கிழங்கு - ஒடியல் எனப்படும். இதைத் திரித்து மாவாக்கி, அந்த மாவில் இருந்து அவிக்கப்படுவதே ஒடியல் பிட்டாகும். இது சத்து மிகுந்த உணவாகும்.

பெரும்பாலும் மதியம் அல்லது காலை உணவாகவே இது உண்ணப்பட்டது. வயல் வேலைக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் இதையே கொண்டுசெல்வார்கள். முதல்நாள் இரவே புட்டை அவித்து உதிர்த்தாமல் அப்படியே வைத்துவிடுவார்கள். காலையில் அது இறுகி இருக்கும். கடினமான பிட்டை தேநீருடன் சேர்த்து சாப்பிடுவார்கள்.

ஒடியல் பிட்டுக்கு கீரை அல்லது மரக்கறி போட்டும் அவிப்பார்கள். சிலர் ஆவி பறக்கும் பிட்டுக்குள் நல்லெண்ணெய் விட்டு கிளறி உண்பார்கள். நெத்தலி கருவாடு போட்டும் ஒடியல் பிட்டு அவிக்கும் பழக்கும் தீவகத்தில் காணப்பட்டது.

## மாட்டுத் தொழுவம்

எமது முன்னைய தலைமுறையினர் பெரும்பாலானவர்கள் கால்நடைகளை வளர்த்தார்கள். விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அனைவருமே தமது தேவைகளுக்காக மாடுகளை வளர்த்தார்கள்.

மாடுகளுக்காக பலவகையான தொழுவங்களை கட்டினார்கள். அவற்றில் இதுவும் (படத்தில் காட்டப்பட்டிருப்பது) ஒன்றும். இந்தத் தொழுவம் பனை ஓலைகள், தடிகள், கருக்கு மட்டைகளைப் பயன்படுத்தியும் அமைக்கப்பட்டது.

நடுவிலுள்ள தொட்டி கருக்கு மட்டை என அழைக்கப்படும் பனை மட்டையால் ஆனது. இத்தொட்டிக்குள் மாடுகளுக்கான உணவு வைக்கப்படும். இதன் மூலம் மாடுகள் உணவை விரயம் செய்யாது.

முதுசொம் மீட்போம்!




# எணேய்...!

எணேய் என்பது யாழ்ப்பாணத்து பேச்சுவழக்குச் சொற்களில் ஒன்று. இந்தச் சொல் இன்று வழக்கில் குறைந்து போனாலும் கிராமங்களில் இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது.

'எணேய்" என்பது ஒரு சுட்டு சொல்லாகவே பயன்படுகிறது. இந்தச் சொல் வயது வேறுபாடின்றி அனைவரையும் அழைப்பதற்குப் பயன்படுகிறது.

உதாரணம்: 'எணேய், அங்கை என்ன செய்யிறியள்..."

'எணேய்...! விடிஞ்சு போச்சு எழும்பணை"

யாழ்ப்பாணத்தில் எழுந்த சிறுகதைகளில், பரவலாக இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.





# மாவிலி துறை

மாவிலி துறைக்கு மாவிலி என்ற பெயர் வந்ததற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன.

தென்னிந்திய அரசன் மாவல்லவன் இத்தீவை ஆண்டதாகவும் அதனால் மாவல்லபுர மக்கள் இத்துறைமுகத்தை மாவிலி என அழைத்ததாகவும் ஒரு கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு.

ஒல்லாந்தர் நெடுந்தீவை ஆட்சி செய்த காலத்தில் இத்துறைமுகம் மூலமாகவே குதிரைகளை இறக்கி ஏற்றினார்கள். மா என்ற சொல் குதிரை, பெரிய என அர்த்தம் தரும். குதிரைகளை ஏற்றி இறக்கியதனாலேயே மாவிலி என்ற பெயர் உண்டாயிற்று என்பதும் ஒரு காரணம். இத்துறைமுகமே இன்று நெடுந்தீவு மக்கள் ஏனைய தீவுகளுக்கும், யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கும் கடல் மூலம் பிரயாணம் செய்யப் பயன்படுகிறது.


இது ஏறைக்குறைய 300 அடி நீளமும் 75 அடி அகலமும் கொண்டுள்ளது. பிரயாணிகள் இறங்கவும் பொருட்களை இறக்கவும், பொருட்களை ஏற்றவும் கொங்கிறீற்றால் கட்டப்பட்ட துறை ஒன்றும் உள்ளது.

# பறாளை விநாயகர் பள்ளு

ஈழத்தில் தோன்றி பள்ளு சிற்றிலக்கியங்களில் பறாளை விநாயகர் பள்ளுக்குத் தனி இடம் உண்டு.

இதனை நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் கி.பி. 18 - 19 நூற்றாண்டில் பாடினார். இந்நூல் யாழ்ப்பாணம் சுழிபுரம் பறாளை எனும் இடத்தில் கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமானின் மீது பாடப்பட்டது.

வழக்கமான பள்ளு இலக்கிய மரபை சற்று உடைத்து இந்நூல் எழுந்துள்ளது. 130 பாடல்களையும் 29 உறுப்புக்களையும் கொண்டமைந்தது.


பறாளை விநாயகர் ஆலயம்

# முள்ளிவாய்க்கால் நம் கடமை என்ன?

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் இனவழிப்பு நடந்த இடம் முள்ளிவாய்க்கால். காலத்துக்குக் காலம் பல படுகொலைகளை எதிர்கொண்ட ஈழத் தமிழினம் சந்தித்த மிகப்பெரும் அழிவு - அவலம் முள்ளிவாய்க்கால். இங்கு நடந்தேறிய அழிவுகள் - இழப்புகள் - அவலங்கள் ஏற்படுத்திச் சென்ற வடுக்கள் - வலிகள் - ரணங்கள் - வேதனைகள் - துன்ப, துயரங்கள் இன்னமும் நம்மை விட்டு விலகிவிடவில்லை - அதிலிருந்து நாம் மீண்டு விடவுமில்லை.

போர் முடிந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்தும்கூட அது ஏற்படுத்திய வடுக்களையும் - போர் தந்த அவலங்களையும் இன்னமும் நம்மினம் சுமந்துகொண்டுதான் நிற்கிறது. முள்ளிவாய்க்கால் படுகொலையை - தமிழ் இனத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட பேரழிப்பை 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' எனப் பெயரிட்டு நினைவு கூருகிறது நம் இனம். கூடவே தனது வேணவாவையும் ஆற்றிக் கொள்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒவ்வொரு ஈழத் தமிழனும் தனது கடமையாகக் கொண்டிருக்கிறான். என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. உரிமைப் போராட்டத்தை ஆதரித்தோரும் சரி - எதிர்த்தோரும் சரி போரில் படுகொலையான அப்பாவிப் பொதுமக்களை நினைவேந்துவதை எதிர்க்கவில்லை - நினைவு கூரவும் தவறவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவுகூரல், நம்மவர்கள் சிலரின் கடமை ஏற்பாடு செய்வதுடனும் பலரின் கடமை நிகழ்வில் பங்கேற்று வெகுஜன ஊடகங்களையும் தாண்டி அதிகம் நுகரப்படும் சமூகவலைத்தளங்களில் படங்கள் - பதிவுகள் - பகிர்வுகளுடன் முடிந்து போய்விடுகிறது. நம்மினத்துக்கு ஏற்பட்ட பெரும் அழிவுக்கு - நாம் கொடுத்த ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்கு - போரின் வடுக்களையும் - வலிகளையும் - ரணங்களையும் இன்னமும் சுமந்து கொண்டிருக்கும் நம்மில் பலருக்கு நாம் செய்யும் கடமை இவ்வளவுதானா...?

**யூதர்களிடம் படிக்க வேண்டிய பாடம்!**

ஜேர்மனியை ஹிட்லர் ஆட்சி செய்த காலம். யூத இனத்துக்கு எதிராக வெறுப்பை உமிழ்ந்த ஹிட்லர் யூதர்கள் மீது கொடூரமான சித்திரவதைகளை கட்டவிழ்த்து விட்டதுடன் குழந்தைகள் - சிறுவர்கள் - இளைஞர்கள் - முதியவர்கள் - ஆண்கள் - பெண்கள் என வகைதொகையின்றி ஹிட்லரின் படைகள் யூதர்களைக் கொன்று குவித்தது.

ஜேர்மனி தனது சாம்ராஜ்யத்தை விஸ்தரித்தபோது இலட்சக் கணக்கானோரைக் கைது செய்தார்கள். இவ்வாறு பிடிபட்டவர்கள் ஹிட்லரின் படைக்கு எதிராகப் போரிட்டவர்களாகவோ அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகவோ அல்லது சதிப்புரட்சி செய்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. குறைந்தபட்சம் ஒருவர் யூதராக இருந்தால் மட்டும் போதும் அவர் கைது செய்யப்படுவதற்கும் - தடுத்து வைக்கப்படுவதற்கும் - சித்திரவதைகளுக்கு உள்ளாவதற்கும் - கொல்லப்படுவதற்கும்.

கைது செய்யப்பட்ட யூதர்கள் வாகனங்களில் நெருக்கி ஏற்றப்படுவார்கள். அந்த வாகனங்கள் சிறப்பு வதை முகாம்களுக்கு யூதர்களை கொண்டுசெல்லும். அங்கு அவர்கள் வேலை வாங்கப்படுவார்கள். அடிமைகளான அவர்களை சாதாரணமாக வேலை வாங்க மாட்டார்கள். மிகக் கடுமையாக வாங்குவார்கள். அவர்களுக்கு சரியான - போதிய உணவு கொடுக்க மாட்டார்கள். ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு பிடி உணவு கிடைத்தால் அதுவே அதிகம். தாகத்துக்கு தண்ணீர் கொடுக்க மாட்டார்கள். நித்திரைக்கு நேரமே ஒதுக்கமாட்டார்கள். அவ்வளவு கடுமையாக வேலை வாங்கப்பட்டார்கள். பெண்கள் என்றால் பாலியல் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள்.

கடும் வேலை, பசி, தாகம் என வதைக்கப்படுபவர்களை ஹிட்லரின் படைகள் விதம் விதமாக சித்திரவதைகள் செய்யும். வதைமுகாமில் வேலை செய்ய முடியாதவர்களுக்கு மரணம்தான் முடிவு. அதுவும் சாதாரணமாக இருந்து விடாது. சிலவேளைகளில் யூதர்களை எண்ணிக்கை கணக்கின்றி ஓரிடத்தில் அடைப்பார்கள். விச வாயுவை நிரப்புவார்கள். துடித்து விழுந்து மரணிப்போரை ரசிப்பார்கள் அல்லது உயிருடன் எரிப்பார்கள். இறுதியாக யூதர்கள் அணியும் காப்புகளை எண்ணி இத்தனை பேர் இறந்தனர் என்று தகவல் அனுப்புவார்கள்.

இப்படி ஹிட்லரின் படைகளால் இவ்வாறு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்கள் 90 இலட்சம் தொடக்கம் ஒரு கோடியே 10 இலட்சம் பேர் வரை இருக்கலாம். இதில் யூதர்களின் எண்ணிக்கை மட்டும் 60 இலட்சம் பேர். இத்தகைய பெரும் இனவழிப்பை சந்தித்த இனம் இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் தனக்கென ஒரு தாயகத்தை உருவாக்கியது. அதுதான் இன்றைய இஸ்ரேல். யூதர்களுக்காக இஸ்ரேல் உருவாகி சரியாக 8 ஆண்டுகளில், அதாவது 1953 இல் ஓர் ஆவணக் காப்பகத்தை திறந்தார்கள். அதுதான் யாட் வாஷம்.

யூதர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டார்கள், எத்தகைய சித்திரவதைகளை அனுபவித்தார்கள், படுகொலையானவர்களின் விவரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரம், அவர்கள் தொடர்பான படங்கள், படுகொலைகள் தொடர்பான ஆவணங்கள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், யூதப் படுகொலைகள் பற்றிய நூல்கள், காணொளிகள், உறவுகளின் சாட்சியங்கள் என அனைத்தும் ஒருங்கிணைந்துள்ளது யாட் வாஷமில்.

இப்போதும் கூட, யாட் வாஷமின் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள் யூதப் படுகொலைகள், யூதர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை ஆவணப்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேலியர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் இனம் எப்படிப்பட்ட அழிவைச் சந்தித்தது என்பதை யாட் வாஷம் சொல்லிக் கொண்டே இருக்கிறது. அவர்களுக்கு மட்டுமல்ல இஸ்ரேல் செல்லும் ஒவ்வொருவரும் யாட் வாஷமிற்கு செல்கிறார்கள். உலகின் மிகப்பெரிய இனவழிப்பை - யூதர்கள் சந்தித்த துன்பங்களை ஆவணங்களாக இன்றும் சொல்கிறது - நாளையும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

• • •

**முன்னுதாரணமாகும் ஜப்பான்**

இதுவும் இரண்டாம் உலகப் போரில் நடந்ததுதான்.

மேற்கில் ஜேர்மனி விழும் நிலையில் இருக்கிறது. ஆனால் ஆசியாவில் நிலைமை தலைகீழ். ஜேர்மனியுடன் அணி சேர்ந்து போரிட்ட ஜப்பான் உச்ச வெற்றி பெறும் நிலையில் இருக்கிறது. அணுகுண்டைக் கண்டுபிடித்த அமெரிக்கா அது ஏற்படுத்தக்கூடிய விளைவை - பாதிப்பை விஞ்ஞான ரீதியில் பரிசோதித்து விட்டது. ஆனால் அதன் விளைவை நேடியாகக் கண்டறிய வேண்டும் என்ற ஆசையில் இருந்தது. இதற்கான பரிசோதனைக் களமாக ஜப்பானைத் தீர்மானித்தது.


ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்படுகின்றன. அதிகமல்ல இரண்டே இரண்டு குண்டுகள்தான் ஹிரோசிமாவில் 90,000 - 1,66,000 பேர் வரையிலும் நாகசாகியில் 60,000 - 80,000 பேர் வரையிலும் உடன் மரணித்தார்கள். இரு நகரங்களிலும் (இன்றுவரை அணுகுண்டு தந்த பாதிப்பு முடியவில்லை. நீள் கதையாகத் தொடர்கிறது.) எந்தக் கட்டமும் இல்லை.



வெறும் சாம்பல் மேடே காட்சியளிக்கிறது. ஆனாலும் பல சேதங்களைக் கண்டு, எலும்புக்கூடாக நிற்கிறது ஒரு கட்டடம். அதுதான் ஜென்போகு டாம். நிமிர்ந்து நின்றாலும் போரின் வடுக்களை சுமந்து நிற்கிறது.

பேரிழப்பை சந்தித்து மீண்டுவிடுகிறார்கள் ஜப்பானியர்கள். உழைப்புக்குப் பெயர் பெற்ற அவர்களின் கடின உழைப்பால் ஹிரோசிமாவும், நாகசாகியும் மீண்டும் எழுகிறது. முன்னிருந்ததை விடவும் கம்பீரமான நகரங்களாக அவை எழுகின்றன. ஆனாலும் ஒன்று மட்டும் மாறவில்லை. அது அணுகுண்டையும் தாங்கி நின்ற ஜென்போகு டாமின் தோற்றம்.

ஆம் தங்களின் அழிவின் அடையாளமாக -




அமெரிக்கா தங்களுக்கு இழைத்த அநீதியின் வடிவமாக - உயிரிழந்த இலட்சக்கணக்கான மக்களின் நினைவாக இன்றும் அது அப்படியே நிற்கின்றது. நிற்பது மட்டுமல்ல ஜப்பானின் வருங்காலத்துக்கு தனக்கு நேர்ந்த கொடுமையை அது சொல்லிக் கொண்டிருக்கிறது. ஜப்பானை சுற்றிப் பார்க்கச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கள் நாட்டுக்கு நேர்ந்த அழிவை - இழப்பை அது சொல்லிக் கொண்டே இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கும் தனக்கு நேர்ந்த கொடுமைகளை அது சொல்லிக் கொண்டே இருக்கும்.

ஓர் இனம் - நாடு சந்தித்த பேரழிவை எப்படி நாம் ஆவணப்படுத்த வேண்டும் என்பதை யாட் வாஷம், ஜென்போகு டாம் ஆகியவை நமக்கு கற்றுத் தருகின்றன. ஆனால் நாம் போர் ஆவணப்படுத்தலில் எவ்விதம் இருக்கிறோம்...?

● ● ●

**சந்தர்ப்பத்தைத் தொலைத்தவர்கள் நாம்**

1981 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராக சிங்கள ஆதிக்கவெறி பற்றி எரிந்த உச்ச தருணம் அது. தென்னிலங்கையில் இருந்து அமைச்சர் காமினி திஸநாயக்கவும் காடையர்கள் குழுவும் ரயில்களில் வந்து இறங்குகின்றனர். ஆங்காங்கு பற்ற வைக்கப்படுகின்றது இனவாதத் தீ. பொலிஸார், இராணுவத்தினரின் அமைதியான அனுமதியுடன் தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன. தமிழர்களின் கல்விச் சொத்தான யாழ். பொது நூலகம் தீயில் பொசுங்கிப் போகின்றது. சுமார் 96 ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின. இவற்றில் பல மீளப் பெற முடியாத மூல நூல்கள், ஏட்டுச் சுவடிகளும் அடக்கம்.

எல்லாம் முடிந்து எலும்புக்கூடாக நிற்கிறது நூலகம். 2001 இல் ஆட்சியில் அமர்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. தமிழர்கள் மத்தியில் அக்கட்சிக்கு ஏற்பட்ட மாறாத கறைகளின் சாட்சியமாக - தமிழருக்கு இழைக்கப்பட்ட அழிவின் - அநீதிகளின் ஆதாரமாக நிற்கும் எரியுண்ட யாழ். பொது நூலகத்தை மீள அமைக்கத் துடிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம். இந்த முடிவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பெரும் தடையாகின்றனர். அருகில் இருக்கும் அரச காணியில் நூலகம் புதிதாக அமைக்கப்பட ேண்டும் என்ற கருத்து வலுவாக முன் வைக்கப்படுகின்றது.

அனைத்து எதிர்ப்புகளையும் மீறி நூலகம் திருத்தியமைக்கப்படுகின்றது. இந்த சாட்சிய அழிப்புக்கு அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, அப்போதைய யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன்ஆகியோர் துணை நின்றனர்.

எரியூட்டப்பட்ட நாளில் இருந்து சுமார் 20 ஆண்டுகள் தமிழின அழிப்பை - தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போரை - தமிழர் மீதான அடக்குமுறையை - ஓர் இனத்தின் புலமை அழிப்பை இனத்தின் சந்ததிகளுக்கு பறைசாற்றிக் கொண்டிருந்த எரியுண்ட நூலகம் இன்று வரலாற்றை மறைத்துப் பொலிவுடன் நிற்கனிறது. இந்த வகையில் நாம் வரலாற்று அழிப்பை ஆவணமாக்கும் சந்தர்ப்பத்தை தொலைத்த இனமாக நிற்கிறோம்.

● ● ●

**மீண்டும் ஓர் சந்தர்ப்பம்**

வரலாற்றின் நீட்சி இப்போது எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. எமது நீண்ட - கடின - வலிய ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப் போனது. எங்கள் உரிமைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்ததில் இராணுவமும் அரசும் வெற்றி பெற்றது. அதற்காக அது கையாண்ட உத்திகளால் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பேரவலங்களைச் சந்தித்தார்கள். போரின் இறுதிநாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரத்தை எட்டும். இறுதிப் போரில் மட்டும்ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. அதிகமாக மட்டும் உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இதிலும் பல மடங்கு தொகையினர் காயங்கள் - அவயவங்கள் இழப்புக்கு உள்ளாகினர்.

போர் தொடங்கிய காலம் தொட்டு மூன்றரை இலட்சம் பேருக்கு சில நூறு பேருக்குப் போதுமான உணவைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்பட்டது. அதுவும் இறுதி ஆறு மாதங்களுக்கு மேலாக எந்த உணவுப் பொருளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அரசாங்கம் தொடுத்த பட்டினிப் போரால் பல குழந்தைகள் இறந்தன. பிறந்து உயிர் தப்பிய, இறந்து பிறந்த, பிறந்த சில நாள்களிலேயே உயிரிழந்த குழந்தைகளும் - மீறித் தப்பிய குழந்தைகள் எறிகணை தாக்குதல்களில் கொல்லப்பட்டமையுமே அதிகம். பால்மாவுக்காகவும் விடுதலைப் புலிகள் கொடுத்த கஞ்சிக்காக காத்துக் கிடந்த சிறுவர்களையும், பொதுமக்களையும் விமானத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுகள் மூலம் கொன்று குவித்தது இராணுவம்.

சுமார் மூன்றரை சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் இரண்டரை தொடக்கம் மூன்று இலட்சம் பேர் நிறைந்து இருந்தார்கள். இராணுவம் சுற்றி வளைத்து நின்றது. தாக்குதல்களால் தினமும் மரணங்களும் - அவல ஒலிகளும் நிறைந்த முள்ளிவாய்க்கால் யுத்தபூமி அவலங்கள் நிறைந்த பூமியானது. எல்லாம் முடிந்த பின்னரும் முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு மீண்டும் அவலங்களை சந்தித்த மக்கள் சுமார் 2 ஆண்டுகளின் பின்னரே சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். முள்ளிவாய்க்கால் மக்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் மூன்றாண்டுகளுக்குப் பின்னரே கிடைத்தது. போரில் இறந்த தங்கள் உறவுகளுக்கு உயிரிழந்த இடங்களில் கடமைகளை செய்ய - அவர்களை நினைவுகூர அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரே இது சாத்தியமானது.

இந்த சாத்திய காலத்தைப் பயன்படுத்தி முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஒரு பகுதியை ஆவணமாக்கும் நடவடிக்கையை நாம் செய்யத் தவறிவிட்டோம். இப்போது நினைவேந்தல் செய்ய ஆரம்பித்து 4 ஆண்டுகள் கடந்தும் முள்ளிவாய்க்கால் பெரிய மாற்றத்தை சந்திக்கவில்லை. அவலங்களை சந்தித்த - போரின் வடுக்களை சுமந்த பூமியின் நிலை இன்னமும் மாறிவிடவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யார் நடத்துவது எனப் போட்டியிடுவோர் முள்ளிவாய்க்கால் பூமியை ஆவணப்படுத்த முன்வரவேண்டும்.

தாயகத்திலும் - உலகம் முழுவதும் பரந்துள்ள வரலாற்று ஆய்வாளர்கள், ஆவணக் காப்பாளர்கள் இதற்காக முன்வரவேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினர் இவர்களை ஒன்றிணைத்து செயற்பட வேண்டும். ஆவணப்படுத்தப்பட வேண்டிய பகுதியை அடையாளப்படுத்தி, அங்கு கிடக்கும் பொருட்களை அப்படியே பேண வழி செய்ய வேண்டும். நம்மிடம் அரசியல் பலம் இல்லை என்பதால், ஒரு பகுதி ஆவணங்களை வெளிநாடு ஒன்றில் பேணவும் வழி செய்ய வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள், வரலாற்றுத்துறையினர் அடையாளப்படுத்திய பகுதியை ஆவணப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டும். இந்தப் பகுதியை மக்கள், அரசிடம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை மக்களுடன் சேர்ந்து அனுபவித்த ஆவணக் காப்பாளர்கள் இன்றும் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றனர். இதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவணக்காப் பாளர்களாக செயற்பட்டவர்கள் புலம்பெயர் தேசங்களில் இயங்கும் ஊடகங்களுக்கு மக்களின் அவலங்களைப் பதிவு செய்து அனுப்பியிருந்தனர்.

இவர்களிடம் இருந்து குறித்த ஆவணங்களின் பிரதிகளைப் பெற்று முள்ளிவாய்க்காலில் ஆவண பேணகம் ஒன்றை அமைத்து காட்சிப்படுத்த வேண்டும். வருங்கால சந்ததிகள் எமது இனம் சந்தித்த அவலங்களைப் அறியவும் - புரியவும் இது ஒரு வாய்ப்பாகவும், சர்வதேச சமூகம் முள்ளிவாய்க்காலில் தமிழினம் சந்தித்த பேரவலத்தை உணர்ந்து கொள்ளவும் இந்த ஆவணப்படுத்தல் உதவும்.

இன்னமும் போர் பாதித்த தேசமாகவே முள்ளிவாய்க்கால் மண் நீண்டு கிடக்கிறது. ஓவியர்கள், ஓவிய மாணவர்கள் எஞ்சிக் கிடக்கும் போர் அழிவுகளை தமது தூரிகைகள் மூலம் பிரதிபலிக்கச் செய்யலாம். அதுமட்டுமின்றி போர் அவலங்களை சந்தித்தவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும் முள்ளிவாய்க்கால் அவலங்களை ஓவியங்களாக்கி அமைக்கப்படும் ஆவணக் காப்பகத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

ஜப்பானுக்கு சுற்றுப் பயணம் செல்பவர்கள் ஜென்போகு டாமை பார்வையிடுவது வழமை. இராஜீக விடயங்களாக அங்கு செல்லும் சர்வதேச நாடுகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் ஜென்போகு டாம் முன்பாக போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர். இவ்வளவும் ஏன்? ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசி இலட்சம் பேரின் அழிவுகளுக்குக் காரணமான அமெரிக்கா தனது செயலுக்கு மன்னிப்புக் கோரியது. காலம் தாழ்த்திய கோரல்தான் ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நாட்டின் செயலுக்கு மன்னிப்புக் கோரியபோது போர் நினைவிடமான ஜென்போகு டாமின் முன்பாகவே மன்னிப்பைக் கோரினார்.

இதேபோல வடக்கு, கிழக்குக்கு சுற்றுப் பயணம் வருபவர்கள் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்களை அறிவதற்கும் - உணர்வதற்கும், புலம்பெயர் தேசங்களில் வாழும் நம் சந்ததிகள் தாய் தேசத்தில் தம்மினம் அடைந்த வலிகளை உணரவும் - இராஜீக விடயங்களுக்காக வடக்குக்கு வரும் சர்வதேச தலைவர்கள், இராஜதந்திரிகள் தமிழினம் பட்ட அவலத்தை அறியவும் - போரில் உயிரிழந்த மக்களை அனைவரும் அஞ்சலிக்கவும் - நம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அவலங்கள் - அடக்குமுறைகள் - உச்சக் கட்ட கொடுமைகளை அடுத்த தலைமுறையும் அறியச் செய்யவும் ஆவணக் காப்பகம் ஒன்று அவசியம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# சுட்டெரிக்கும் கோடை வெயில் பாதிப்புக்களை தவிர்ப்பது எப்படி?

சுட்டெரிக்கும் வெயில் ஆரம்பித்து விட்டது. வரும் 29 ஆம் திகதி வரை இது நீடிக்கும். ஏற்கனவே சுட்டெரிக்கும் வெயிலையே தாங்க முடியவில்லை. இந்நிலையில் காண்டாவன வெயிலை எப்படிச் சமாளிப்பது?

சுட்டெரிக்கப் போகும் வெயிலால் ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகளை தவிர்ப்பது எப்படி எனப் பார்ப்போம்.

● வெயிலில் வியர்வை அதிகம் வெளியேறுவதால், உடலில் நீர்ச்சத்து குறையும். எனவே, அதை ஈடுகட்டும் அளவுக்கு அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், தினமும் குறைந்தது மூன்று லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். வெயிலில் வெளியே செல்லும் போது தண்ணீர் போத்தலைக் கொண்டு செல்வதும் நல்லது. தேநீர், கோப்பி அருந்துவதைக் குறைப்பதுடன், குளிரூட்டப்பட்ட தண்ணீர், செயற்கைக் குளிர்பானங்களையும் தவிர்க்க வேண்டும். மண்பானையில் ஊறிய தண்ணீரைக் குடிப்பது நல்லது. நீர்மோர், இளநீர், பானகம், சர்பத், பதநீர் மற்றும் பழச்சாறுகளை அருந்தலாம்.

● கோடை காலத்தில், குழந்தைகள் தொடங்கி முதியவர் வரை அனைவரையும் வதைக்கும் முக்கியப் பிரச்சினை வியர்க்குரு. உடலில் வியர்வை தங்குவதால்தான் வியர்க்குரு ஏற்படுகிறது. இதைத் தடுக்க, தினமும் காலை, மாலை இரண்டு வேளையும் குளிக்க வேண்டும். வெயிலில் வெளியே சென்று வீடு திரும்பியதும் கை, கால்களை நன்றாகக் கழுவ வேண்டும். வியர்க்குருவைச் சொறிந்தால் அது தொற்றுக்கு வழிவகுக்கும்.

● வியர்வை நாற்றம், கோடை காலங்களில்



அனைவருக்குமான பொதுவான பிரச்சினை. அக்குள் போன்ற மறைவிடங்களில் உள்ள ரோமங்களை நீக்கி, முறையாகச் சுத்தம் செய்து பராமரித்து வந்தாலே வியர்வை நாற்றம் கட்டுப்படும். அக்குள் பகுதிகளில் பற்றீரியாக்கள் வளர்வதைத் தடுக்க முடியாது. ஆனால், அன்ரி பற்றீரியா சவர்க்காரங்களைப் பயன்படுத்தலாம்.

● வெயில் கொளுத்தும் நேரமான காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை வெளியே செல்வதை முடிந்தவரை தவிர்க்கலாம். வெயில் பாதிக்காமலிருக்க 'சன் கிளாஸ்' அணிவது நல்லது. நீண்டநேரம் சூரிய ஒளியின் புறஊதாக்கதிர்கள் உடலில் படுவதால், சருமப் பிரச்சினைகள் ஏற்படும். எனவே, வெயிலில் வெளியே செல்வதற்குமுன், வெளியே தெரியும் பகுதிகளில் 'சன்ஸ்கிரீன்' லோஷனைத் பூசலாம். உடல் முழுவதையும் மறைக்கும் ஆடைகளை அணிவதும் பலன் தரும்.

● உடலில் ஈரம் தங்காத அளவுக்கு வியர்வையை உறிஞ்சும் பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். இறுக்கமான ஆடைகள் மற்றும் உள்ளாடைகளால் சருமத்தில் வியர்வை தங்கி படர்தாமரை, அரிப்பு போன்ற பாதிப்புகள் உண்டாகும். படர்தாமரைக்கான க்ரீம்களை மருத்துவர் ஆலோசனையுடன் பூசலாம். அடர் நிறங்களைத் தவிர்த்து வெளிர்நிற ஆடைகளை அணியலாம். தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.

● நோய் எதிர்ப்புத் திறன் குறைவதாலும், சுகாதாரமற்ற பழக்கவழக்கங்களாலும் வேனிற்கால சீழ்க் கட்டிகள் உண்டாகும். முதுகு, கழுத்து, அக்குள் மற்றும் தொடைப் பகுதிகளில் இவை உருவாகலாம். சிறிய கொப்புளங்கள்போலக் காட்சியளிக்கும் இந்தக் கட்டிகள் வீங்கி வலியெடுக்கும். இந்தக் கட்டிகளை உடைக்கக் கூடாது. தொற்று ஏற்படுவதற்குள் மருத்துவரை அணுக வேண்டும்.

● கோடையில் பலருக்கும் தலைமுடி வறட்சியாகக் காணப்படும். எனவே, தோய்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தலையில் எண்ணெய் வைத்து தோய்வதன் மூலம் இப்பிரச்சினையைத் தவிர்க்கலாம்.

● புற ஊதாக் கதிர்களின் வெப்பத்திலிருந்து சருமத்தைப் பாதுகாக்க ஓரேஞ், கரட், புரோக்கோலி, மாம்பழம், பப்பாளி, தர்பூசணி மற்றும் கீரைகளை அதிகம் சாப்பிட வேண்டும். காரம் நிறைந்த, எண்ணெய் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருள்களை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

● கோடையில் ஏற்படும் சரும வறட்சியால் பாதங்களில் வெடிப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க தினமும் இரவில் பாதங்களைக் கழுவி, சுத்தப்படுத்திவிட்டு, தரமான மாய்ஸ்ச்சரைசர் களிம்பைப் பூசலாம்.

---


## உணவே மருந்து

### மாங்காய் - இஞ்சி தொக்கு

மாங்காயின் மணமும், இஞ்சியின் குணமும் கொண்டது மஞ்சள் குடும்பத்தைச் சேர்ந்த 'மாங்காய் இஞ்சி.' இஞ்சியின் முக்கியமான மருத்துவ குணங்களான சமிபாட்டுக் கோளாறுகளை நீக்குவது, குடலைச் சுத்தப்படுத்துவது, வயிற்று உப்புசத்தைத் தடுப்பது என அனைத்தும் மாங்காய் இஞ்சிக்கும் உண்டு.

**பலன்கள்:**

குடல் சார் பிரச்சினை உள்ளவர்கள், மாங்காய் சேர்த்த உணவுகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுவார்கள். அவர்கள் மாங்காய் இஞ்சியில் செய்யப்படும் உணவுகளைத் தயக்கமில்லாமல் சாப்பிடலாம். அசிடிட்டி பிரச்சினையால் எலுமிச்சை ஊறுகாயைத் தவிர்ப்பவர்கள், எலுமிச்சை ஊறுகாயுடன் தோல் சீவிய மாங்காய் இஞ்சியைச் சேர்த்து, பயமின்றி சாப்பிடலாம். அன்ரிபற்றீரியல், அன்ரி பங்கல், அன்ரிஒக்ஸிடன்ட் சத்துகளைக் கொண்டது மாங்காய் இஞ்சி. அதனால், இது உடலின் நச்சுத் தன்மைகளை நீக்கும் இரத்தத்தைச் சுத்திகரிக்கும் வயிற்றிலுள்ள கிருமிகளை அகற்றும் ஒவ்வாமைப்



பிரச்சினைகளைப் போக்கும், பசியின்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் சமிபாட்டுப் பிரச்சினைகளைப் போக்கும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

குழந்தைகளுக்கு, எலுமிச்சைச் சாற்றுடன், மாங்காய் இஞ்சியைச் சேர்த்து அரைத்துக் கொடுக்கலாம். மேலும் இது, டிரைகிளைசரைட் போன்ற கெட்ட கொழுப்புச்சத்தை உடலிலிருந்து நீக்கும். மாங்காய் இஞ்சியைச் சாறாக்கி, வலி இருக்கும் இடத்தில் ஒத்தடம் கொடுத்தால், வலி குறையும்.

குறிப்பு: மாங்காய் இஞ்சித் தொக்கை, ஒரு நாளைக்கு 10 கிராம் அளவு வரை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம். அதற்கு மேல் எடுத்துக்கொண்டால், வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படலாம். அதிகபட்சம், பதினைந்து நாள்கள் வரை வைத்திருந்து இதைப் பயன்படுத்தலாம்.

**தேவையானவை:**

மாங்காய் இஞ்சி : 250 கிராம்
மிளகாய்த்தூள் : 2 மே.கரண்டி
கடுகு : 1 மே.கரண்டி
வெந்தயம் : 2 மே.கரண்டி
மஞ்சள்தூள் : 1 மே.கரண்டி
பெருங்காயம் : அரை மே.கரண்டி
உப்பு, கறிவேப்பிலை,
நல்லெண்ணெய் : தேவையான அளவு
புளிக்கரைசல் : தேவையான அளவு

செய்முறை: சட்டியில் நல்லெண்ணெய் விட்டு, எண்ணெய் சூடானதும் துருவிய மாங்காய் இஞ்சியைப் போட்டு வதக்க வேண்டும். பிறகு, வேறொரு சட்டியில் நல்லெண்ணெய் ஊற்றிச் சூடானதும், கடுகைப் போட்டு வறுக்க வேண்டும். கடுகு வெடித்ததும் கறிவேப்பிலை, மஞ்சள்தூள், உப்பு, மிளகாய்த்தூள் மற்றும் தயாராக இருக்கும் பெருங்காயம் - வெந்தயம் - கடுகுத்தூளைச் சேர்த்து வதக்க வேண்டும். ஐந்து நிமிடங்களுக்கு நன்றாக வதக்கியதும், ஏற்கனவே வதக்கி வைத்திருக்கும் மாங்காய் இஞ்சியுடன் சேர்த்துக் கிளறி, சில நிமிடங்கள் கழித்து, புளிக்கரைசலைச் சேர்க்க வேண்டும். நன்றாகக் கொதித்ததும், உப்பு சேர்க்க வேண்டும். நீர் வற்றியதும், அடுப்பிலிருந்து இறக்கினால், அருமையான மாங்காய் இஞ்சித் தொக்கு ரெடி!

குறிப்பு: இதை செய்யும்போது, அடுப்பை 'சிம்'மில் வைத்துக்கொள்வது நல்லது.

# ஆண்கள் மூலம் குட்டி ஈனும் விலங்கு...!

கொண்டாட்டங்களும் வேதனைகளும் சோதனைகளும் உலகிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானவை. மனிதன், பறவை, விலங்கு என்ற பாகுபாடெல்லாம் இயற்கைக்குக் கிடையாது. பிறப்பு எந்த உயிரினத்துக்குமே சாதாரணமாக அமைந்துவிடுவதில்லை. அதற்காகப் பல வலிகளையும், பல சோதனைகளையும் கடந்து வந்தாக வேண்டும். மனித இனத்தை விட அதிக வலிகளைப் பொறுத்து குட்டிகளைப் பெறுகிற உயிரினங்களும் இங்கே இருக்கின்றன.



கிவி

**கிவி (KIWI BIRD)**

கிவி பறவை இனத்தைச் சேர்ந்தது. இதனுடைய பெயர் கேட்பதற்கு அழகாக இருக்கலாம், ஆனால் அதன் பிரசவக் காலம் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை என்பதுதான் உண்மை. இனச்சேர்க்கைக்கு பிறகு பெண் கிவிகள் முட்டையிட்டு குஞ்சுகளை உலகிற்குக் கொண்டு வருகின்றன. இங்கே கிவிகளுக்குப் பிரச்சினையே அது இடுகின்ற முட்டைதான். தன்னுடைய மொத்த உடல் எடையில் 20 வீத அளவிலான முட்டையை இடுகிறது. மனித இனத்தோடு ஒப்பிட்டால் ஒரு பெண் பிரசவ நேரத்தில் 7 வயதுக் குழந்தையை பெற்றெடுப்பதற்குச் சமம். உலகிலேயே இவ்வளவு பெரிய முட்டையை இடுவது கிவி பறவைகள்தான். இதோடு பெண் கிவிகளின் வேலை முடிந்துவிடுகிறது. இனி முட்டையை அடைகாத்து குஞ்சுகளைப் பாதுகாப்பாக உலகிற்குக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு ஆண் கிவிகளுடையது.

**தஸ்மானியன் டெவில் (TASAMANIYAN DEVIL)**

உலகிலேயே இனப்பெருக்க காலத்தில் மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவது இந்த விலங்குதான். இனப்பெருக்கக் காலத்தில் பெண் டெவில் மட்டும் பாதுகாப்பான இடத்தைத் தேடி அலையும். குட்டி போடுவதற்கு முன்பாக பாதுகாப்பான இடத்தைத் தெரிவு செய்யும். புற்கள், வைக்கோல் போன்றவற்றை கொண்டு மென்மையான ஒரு படுக்கையைத் தயார் செய்து கொள்ளும். பிரசவ நாளன்று சுமார் 30 இல் இருந்து 40 குட்டிகள் வரை ஈன்றெடுக்கும். அதுவரைக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. எல்லா பிரச்சினைகளும் அதற்கு மேல்தான் ஆரம்பமாகும்.

இயற்கை எவ்வளவு நம்பிக்கையானதோ, அதே அளவிற்குக் கொடுமையானதும் கூட. பிறந்த ஒவ்வொரு குட்டியும் ஒரு சோற்று பருக்கை அளவிற்கே இருக்கும். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் சோற்றுப் பருக்கை அளவிற்குப் புழு என்றால் கூட பரவாயில்லை, பிறந்திருப்பது விலங்கின் குட்டிகள். ஒவ்வொன்றும் எப்படியோ முட்டி மோதி வெளியே வந்துவிடுகின்றன. பிறப்பதை விட உயிர் வாழ்வது தான் வாழ்வின் தொடக்கம். இதோடு இயற்கை நின்றுவிடவில்லை, இன்னொரு சவாலையும் வைத்திருக்கிறது. பெண் டெவிலுக்கு நான்கு பாலூட்டும் முலைகளே இருக்கும். அதில் 40 குட்டிகள் பால் அருந்துவதே நினைத்துப் பார்க்க முடியாத கொடூரம்.

40 குட்டிகளில் எந்தக் குட்டி பால் குடித்தது எந்தக் குட்டி பால் குடிக்கவில்லை என்பதைத் தாயால் கண்டுபிடிப்பதே இயலாத காரியம். முடிவில் ஐந்தில் இருந்து எட்டு குட்டிகள் வரை மட்டுமே உயிர் பிழைக்கும். இதில் இன்னொரு துயர சம்பவம், பிழைக்காது எனத் தெரிகிற குட்டிகளை டெவில் தனக்கு இரையாக்கிக் கொள்ளும். பல கோடி உயிரணுக்களின் போட்டியில் ஒரு உயிரணுதான் மனிதனைப் படைக்கிறது. டெவிலின் 40 குட்டிகளில் ஒன்றிரண்டுதான் தப்பிப் பிழைக்கிறது. இயற்கை எவ்வளவு முரணானது.



தஸ்மானியன் டெவில்

**முள்ளம்பன்றி (PORCUPINE)**

முள்ளம்பன்றிகளின் கர்ப்ப காலம் 240 நாட்கள் நீடிக்கும். பொதுவாக வருடத்திற்கு ஒரு தடவைக்கு 2 முதல் 4 குட்டிகள் வரை ஈனும். குட்டிகள் பிறக்கும் போது அவற்றின் கண்கள் திறந்தே காணப்படும். குட்டிகளின் உடல் குட்டையான மென் முட்களால் மூடப்பட்டிருக்கும். குட்டிகள் பிறக்கும் பொழுது, வால் பகுதியே முதலில் வெளியே வரும். தாய் முள்ளம்பன்றியின் பிரச்சினை அதன் முள்ளில் இருந்துதான் தொடங்குகிறது. மென்மையான முட்கள்தான் என்றாலும் இவை தாயின் உடலை காயப்படுத்திவிடுகின்றன. குட்டிகள் உலகிற்கு வந்த அடுத்த சில மணி நேரங்களில் முட்கள் உறுதியாகிவிடுகின்றன.



முள்ளம்பன்றி

**கடல் குதிரை (SEA HORSE)**

இணை சேர்க்கை முடிந்ததும் பெண் கடற்குதிரைகள் தங்களின் முட்டைகளை ஆண்களின் வால் பகுதியில் உள்ள இனப்பெருக்கப் பைகளில் விட்டுவிடும். முட்டைகளைப் பாதுகாத்து அவற்றைப் பெற்றெடுக்க வேண்டியது ஆண் கடல் குதிரையின் பொறுப்பு. சுமார் 200 முட்டைகள் வரை சுமந்தாக வேண்டும். முட்டையில் இருந்து வெளியே வருகிற குட்டிகள் சில நாட்கள் அதன் பாதுகாப்பு பையிலேயே இருக்கும். உலகிலேயே ஆண்கள் மூலம் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது இந்த விலங்கு மட்டும்தான்.

பிரசவத்திற்குப் பயந்தாலும் குட்டிகளைப் பெற்றாக வேண்டுமென்பது இயற்கையின் விதி.



கடல் குதிரை

# இயல்பாய் ஒரு சினிமா




மிகவும் பரிட்சயம் இல்லாத அசாம் மாநிலத்தில் இருந்து இந்தியாவின் சிறந்த படத்திற்கான தேசிய விருது (2018) பெற்ற படம் என்ற வகையில் கவனம் ஈர்த்தது இந்த "Village Rock stars". மொத்தம் 4 தேசிய விருதுகள், சில சர்வதேச விருதுகள் மற்றும் ஆஸ்கார் விருதிற்கு பரிந்துரைக்கப்பட்ட இந்தியத் திரைப்படம் என்ற பெருமைக்குரிய விடயங்கள் ஒரு புறம் இருக்க இந்தப் படம் பதிவு செய்திருக்கும் ஒரு குக்கிராமத்தின் வாழ்வியலும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையும், ஒரு ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்து வளரும் ஒரு பெண்ணின் கனவும், அந்தக் கனவின் மீது அவள் கொண்டிருக்கும் நம்பிக்கையும், அந்த கனவு நனவாக அவள் மேற்கொள்ளும் சிற்சில முயற்சிகளும், மழை வெள்ளம் என் இயற்கை சீற்றங்களுக்கு நடுவே சிக்கித் தவிக்கும் மக்களின் கடின உழைப்பும், அவர்களின் எதார்த்தமான அன்றாட வாழ்க்கையும் என இந்தப் படம் பார்ப்பவர்களின் மனதிற்குள் கண்டிப்பாக ஏதோ ஒரு வகையில் ஊடுருவிச் செல்லும் என்றால் அது மிகையாகாது.

படத்தின் கதை என்று பார்த்தால் சொந்தமாக ஒரு இசைக்கருவி (கிட்டார்) வாங்க ஆசைப்படும் ஒரு சிறுமியின் கனவு என்று ஒற்றை வரியில் சொல்லி விடலாம். ஆனால் படத்தில் என்னைக் கவர்ந்த விடயங்கள் ஏராளம். முதலில் இந்தப் படத்தில் நடித்திருக்கும் பெண்களின் ஆர்ப்பாட்டமில்லாத அருமையான நடிப்பு. குறிப்பாக குட்டிப்பெண் துனு மற்றும் அவளின் அம்மா. ஒரு பக்கம் துனு இயல்பாக உற்சாகமாக இருக்கிறாள், பாக்கு மரம் ஏறுகிறாள், சக ஆண் நண்பர்களுடன் சகஜமாகச் சுற்றித் திரிகிறாள். அவளின் உலகம் அவ்வளவு அழகாக இருக்கிறது. மறுபுறம் அவளின் அம்மா கணவனை மழை வெள்ளத்தில் இழந்திருந்தாலும் முடங்கி விடவில்லை. விவசாயம் செய்கிறாள், வாழ்க்கையை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்கிறாள், மகளைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக இருக்கிறாள். அதே சமயம் மகளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று ஆர்வமும் காட்டுகிறாள்.

பெண் சுதந்திரம், பெண்ணியம் என்றெல்லாம் படம் காட்டாமல் அல்லது பாடம் எடுக்காமல் இயல்பான கிராமத்துப் பெண்ணாக துனுவையும் அவளின் அம்மாவையும் இவர்கள் இருவருக்கும் இருக்கும் உறவையும் காட்சிப்படுத்திய விதம் அழகு. படத்தின் இயக்குனர் றிமா தாஸ் ஒரு பெண் என்பதாலும் அந்தக் கிராமத்தில் இருந்தே வந்தவர் என்பதாலும் வறுமையிலும், ஏழ்மையிலும் சிக்கித் தவிக்கும் உண்மையான இந்தியப் பெண்களின் முகத்தை அப்படியே இந்தப் படத்தில் பிரதிபலித்திருக்கிறார். கிட்டத்தட்ட ஆவணப் படம் போலவே தோன்றினாலும் இங்கு வெளிவரும் 100 கோடி, 1000 கோடி கமர்சியல் காட்டாற்றுக்கு நடுவே ஒரு அழகிய நீரோடை போல நம் கண்முன் நகர்வது இந்தப் படத்தின் தனிச்சிறப்பு. இதற்காகவே இயக்குனர் றிமா தாஸை மனதாரப் பாராட்டலாம்.

படத்தில் நடித்தவர்கள் மற்றும் பணியாற்றியவர்கள் பெரும்பாலும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், உறவினர்கள். சினிமா பின்னணி துளியும் இல்லாமல் வெறும் சினிமா ஆர்வமும் அதற்கான விடாமுயற்சியும் இருந்தால் போதும் ஒரு அழகான, இயல்பான சினிமா எடுக்கலாம் என்பதற்கு இந்த படத்தின் இயக்குனர் ஒரு சிறந்த உதாரணம். படம் எந்த ஒரு திருப்பமும் இல்லாமல் போவது சிலருக்கு குறையாகத் தெரியலாம். ஆனால் வாழ்க்கையை அதன் போக்கில் போய் படம் பிடிப்பது தானே எதார்த்தம் என்ற வகையில் இந்தப் படம் பாராட்டப் படவேண்டிய முயற்சி.



அன்றாடம் கிழக்கினுள் விரிந்திருக்கின்றன
நான்காகத் தோற்றமளிக்கும்
எனது அறையின் இரு சாளரங்கள்

ஒரே நேர்கோட்டில்
உள்ளிருந்தும் அங்கிருந்தும் காண வேண்டும்
அப்போதுதான்
எது எப்பக்கம் உள்ளதென அறியலாம்

அதுவும் நகர்வில் பெயர்ந்து செல்வதை
யாரும் கவனியாதிருக்கலாம்
இருப்பினும் அந்தந்த நொடிகளில்
நிலைகொள்வதை எல்லாம்
நிலையற்றிருத்தலில் கரைத்துவிடுதல் பேரின்பம்

சாளரங்களுக்கு இடையில் சத்தமிட்டுக் கடந்த
குருவியொன்றின் உருவம் போல்
நினைவகன்று போக
இன்னும் எத்தனை நாட்கள்
மூடித் திறக்கக் கடவதோ?

**எஸ். சண்முகம்**





உங்கள் ஆக்கங்களை **'வாசிகை'**, ஆசிரியர், **புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கோ அல்லது **sinnarajavimalan18@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# புனைவின் மாஜாயாலம்

■ **சுரேஸ்**

தமிழ் இலக்கியத்தில் முதன்மையான கதைசொல்லியாக திகழும் எழுத்தாளர் அ.முத்து லிங்கத்தின் 20 கதைகள் அடங்கிய தொகுப்பு இது. பெரும்பாலான கதைகள் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அழகாக புனையப்பட்டுள்ளன. அ.முத்துலிங்கம் தனக்கே உரித்தான அங்கத உணர்வுடன்கூடிய கதைகளை எழுதியிருந்தாலும் அது மனிதர்களின் நெகிழ்ச்சியான தருணங்களை வெளிப்படுத்தி, வாசிக்கும் வாசகர்களின் நெஞ்சில் பசுமரத்தாணி போல ஆழமாகப் பதிந்துவிடுகிறது.

பல்வேறு நிலப்பரப்புகளில், மாறுபட்ட கலாசார சூழல்களில், வித்தியாசமான மனிதர்களின் ஊடாக நிகழும் இவர் கதைகள் அம்மனிதர்களின் ஏக்கங்களை, நெகிழ்வுகளை, சோகங்களை அழுத்தமாகப் பதிவு செய்கிறது. உண்மைக்கு சற்றே நெருக்கமாக இருக்கும் கதைகள் என்பதால் அவை வாசகர்களிடமும் நெருக்கமாகிவிடுகிறது. ஹாஸ்யங்களினூடே துயரங்களைச் சொல்லும்போது அவை மேலும் வீரியத்துடன் படிக்கும் வாசகர்களிடம் போய் சேருகிறது. இம்மாதிரியான எழுத்துநடை கத்திமேல் நடப்பதற்கு சமமானது. சிறிது மாறுபட்டாலும் சொல்லவந்த கதையின் கரு சிதைந்துவிடும் என்பது உண்மை. ஆனால் இந்நடையில் எழுதுவது என்பது முத்துலிங்கத்திற்கு கைவந்த




கலையாக உள்ளது என்பது இத்தொகுப்பை வாசிக்கும்போது நாம் உணரலாம்.

முதல் கதையான 'முதல் ஆச்சரியம்' என்ற கதையில் சியரா லியோன் என்ற நாட்டில் தனக்கும் அவ்வூரின் தபால் அலுவலருக்கும் இடையே நிகழும் நிகழ்வுகளை அங்கதச் சுவையுடன் விவரிக்கிறார். அவர் அந்த தபால் அலுவலகத்தின் சூழலை விவரிப்பதே நமக்குச் சிரிப்பை மூட்டிவிடுகிறது. 'ஒரு சின்ன அறை. நீளமான கம்பிகளால் அதை அடைத்திருந்தார்கள். முதல்பார்வைக்கு அது சிறை போலவே தோற்றமளித்தது. நான் போனபோது 50 - 55 வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்று கொண்டிருந்தார். சுருட்டைத் தலைமுடியை ஒட்ட வெட்டியிருந்தார். குதிரைக்கு இருப்பது போலவே சற்று மேலே மடிந்த உதடு. தொளதொளவென்ற நீண்ட ஆடை. மிச்சத்துணி சுருண்டுபோய்க் காலடியில் கிடந்தது.


(22ஆம் பக்கம் பார்க்க)




குறுகிய காலத்தில் அனைவரையும் கவர்ந்தவர் சாய்பல்லவி. அதிக மேக்கப், அநாவசிய அங்க சேஷ்டை, கவர்ச்சி எதுவும் இன்றியே சினிமாவில் வெற்றி பெற்றவர்.

சாய்பல்லவி மலையாளத்தில் 'விராட பர்வம்' 1992 என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தில் நடிக்க பல நடிகைகளையும் அணுகியபோதும் அவர்கள் மறுத்து விட்டார்களாம்.

காரணம் மேக்கப் இல்லாமல் நடிக்க வேண்டும் என்பதுதான். ஆனால், சாய்பல்லவி உடனே படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு விட்டாராம்.



அட்லீ - விஜய் இணைப்பில் 'விஜய் 63" படம் உருவாகிறது. படப்பிடிப்பு தளத்தில் ஏற்பட்ட தீ மற்றும் தொடர் விபத்துக்களால் படத்தின் படப்பிடிப்பு இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த வாரம், வேறு ஒரு ஷெட்டில் படப்பிடிப்பு ஆரம்பமாகி நடக்கிறது.



ஜெயம் ரவி இப்போது 'கோமாளி' படத்தில் நடித்து வருகிறார். நகைச்சுவைப் படமாகவும் கருத்துப் படமாகவும் உருவாகும் இந்தப் படத்தில் ஜெயம் ரவிக்கு 9 வேடங்கள்.

ராஜா, ஆதிவாசி, ஆங்கிலேயர் கால அடிமை, 90 களின் இளைஞர் என 4 வேடங்களில் நடிப்பது உறுதியாகியுள்ளது. படத்தின் நாயகியாக காஜல் அகர்வால் நடிக்கவுள்ளார்.

'பூமராங்' படத்தின் பின்னர், மீண்டும் அதர்வாவை இயக்கவுள்ளதாக கண்ணன் அறிவித்தார்.

இந்நிலையில், கண்ணன் இயக்கத்தில் சந்தானம் நடிக்கவுள்ளார்.

பெயரிடப்படாத இப்படத்தின் படப்பிடிப்பு வரும் ஜூன் மாதம் தொடங்கவுள்ளது.



'பொன்னியின் செல்வன்' படம் 1000 கோடி இந்திய ரூபா செலவில் உருவாகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தயாரிக்க ஒப்புக் கொண்ட லைகா சற்றுப் பின்னடிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் மறுபுறத்தில் நடிகர்களை ஒப்பந்தம் செய்வதில் மணிரத்னம் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் அமலாபாலை முக்கிய பாத்திரத்தில் நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது.



சிவகார்த்திகேயனின் அடுத்த படத்தில் அனு இமானுவேல் நாயகியாக நடிக்கிறார். படத்தின் படப்பிடிப்பு கடந்த வாரம் ஆரம்பித்தது.

பாண்டிராஜ் இயக்கும் இப்படத்தில், நாயகியாக நடிக்க முன்னணி நாயகிகளிடம் பேச்சு நடத்தப்பட்டது. இறுதியாக அனு இமானுவேல் ஒப்பந்தமானார்.

அனு, துப்பறிவாளன் படத்தில் விஷால் ஜோடியாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



'இறுதிச் சுற்று' படம் மூலம் அறிமுகமானவர் ரித்திகா சிங். தொடர்ந்து 'ஆண்டவன் கட்டளை', 'சிவலிங்கா' படங்களில் நடித்தார்.

தற்போது ஹிந்தி, தெலுங்கில் கவனம் செலுத்தி வருகிறார். ஆனால், அவருக்கு வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் படுகவர்ச்சியாக படங்களை எடுத்து வெளியிட்டு வருகிறார்.

புதுவிதி சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பாராட்டுப் பரிசு பெற்ற சிறுகதை



# மௌனமாய் பேசும் வெளி

■ புகழ்

**இறந்தகாலம்**

கந்தகப் புழுதிக்குள் அவர்கள் இரவையும் பகலையும் இழந்தார்கள். வேட்டைகாரர் களின் துப்பாக்கிக்கும் வேட்டை நாய்களின் மோப்பத்துக்கும் பலியாகிவிடப் போகிறோமோ என்ற பயத்துடன் பலி எடுப்புக்களைப் புரிந்து கொண்டு முயல்களைப் போல பதுங்கியிருந்தார்கள். கடவுளே இல்லை... இல்லை என்று சொல்லிக் கொண்டே வேண்டினார்கள். எப்போது அமைதி பிறக்கும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். வெட்டி எறியப்படும் தலைமுடி போலவே,ா நகம்போலவோ அவர்கள் உணர்வற்று இல்லை. அவர்களின் உயிர் எதிலோ அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

ஒரு தாய் கடைசியாக இருந்த தண்ணீரையும் குடித்து விட்டு கையில் தவழ்ந்த தன் மகனுக்கு இரத்தத்தைக் கொடுத்தாள். அவள் செவிகள் குண்டுகளின் சத்தத்திற்குப் பலியாகி போய்விடுமோ என்று அஞ்சி அவள் காதுகளை பொத்திப் பொத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள். குண்டுகள் இப்போது அவர்களை விட்டு ஒதுங்கிப்போய் எங்கோ விழுந்தன. இறுகிய மூச்சு மெல்ல விடுபடுகையில் அவளுடன் இருந்த அண்டை வீட்டு மலர் வெளியே எட்டிப் போய் பார்த்தாள். பிறகு மறுபடியும் பதறி அரண்டபடி உள்ளே வந்து சொன்னாள் "எல்லா வீடுகளும் பத்தியெரிகின்றன".

சனங்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மண்படைகள் சிவந்து கிடக்கின்றது. அதன் மேல்... அவள் விக்கினாள். உடல் சிதறி உருக்குலைந்தவர்களை நான் பார்த்தேன். இந்தப் பதுங்கு குழியும் பாதுகாப்பற்றது என்றபடி வெளியில் ஓடினாள். எங்கோ ஓர் மரண ஓலம் கோரமாய்க் கேட்டது. அந்தத் தாய் வெளியே வந்தாள். மலர் பின்னால் ஓடினாள். இன்றைக்குப் புறப்படலாம் என்ற கணவன் இன்னும் வந்து சேரவில்லை. அவனை நினைத்து ஒருபுறம் கலங்கிக் கொண்டு ஓடினாள்.

கண்ணில்பட்டவர்கள் எல்லாம் அலறினார்கள் எதிர்வீட்டில் கேட்ட அலறல் குடல்புடுங்கி எறியப்பட்ட, தொடை துண்டா டப்பட்ட பெண்ணினுடையது. அவள் இன்னும் உயிரோடு இருந்தாள். அவள் ஈஸ்வரத்தின் குரலைக் கடந்து போனாள். சிலர் இறந்து கிடந்தவர்களின் நகைகளை உருவிக் கொண்டு எதிர்காலத்துக்கு உயிரைப் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந் தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அதிகாலையில் சுளகுகளுடன் பற்றைக்குள் மலம் கழிக்கும் சுதந்திரத்தை பிறந்த மண்ணில் இழந்தார்கள்.

• • •

**நிகழ்காலம்**

கதையை எழுதிக் கொண்டிருக்கும் போதே எனக்குள் ஏதேதோ எண்ணங்கள் துண்டுபட்டு, துண்டுபட்டு ஓடிக்கொண்டிருந்தது. ச்சா... இதையெல்லாம் நான் ஏன் எழுத வேண்டும். இப்படி அடிக்கடி கேட்டும் திரும்பத் திரும்ப அதையே எழுதிக் கொண்டிருக்கிறேன். சிதைந்த உடல்கள், இரத்தம், கர்ணமல் போன உயிர். இவை எல்லாம் எவ்வளவு மோசமான வர்ணிப்புக்கள் என்று எனக்குள் நானே நொந்து கொள்கிறேன். ஆனாலும் அவ்வாறு எழுதாமல் உண்மையை எப்படிச் சொல்ல முடியும்...?

எத்தனையோ எழுத்தாளர்கள் இதையேதான் கருவாய் வளர்த்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நானும் ஏன் எழுத வேண்டும். அப்போதுதான் நினைப்பேன். அன்றைக்குக் கண்களை மூடிக்கொண்டு உயிரை இழுத்துக் கொண்டு ஓடிவந்திருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் அந்த மனிதர்களை நான் பார்த்தும் கேட்டும் இருக்க மாட்டேன். எனக்குக் கனவுகளும் வந்திருக்காது. எழுது எழுது என்று உள்ளுக்குள் குத்திக் கொண்டும் இருந்திருக்காது.

இப்படி எத்தனை கதைகளைத் தான் படிப்பது. பெரும்பாலும் எல்லாம் ஏதோ ஓர் வகையில் யுத்த ரத்தக் கதைகள்தான் இன்னும் சலிக்காமல் எப்படிப் படிக்க முடிகிறது. நானேகூட அதையேதான் எழுதிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கெல்லாம் வேறு கருவே இல்லையா என்று யாரும் கேட்டாலும் அதையே திரும்பத் திரும்ப எழுதுகிறேன்.

அவர்களைப் போல காதலையும் காமத்தையும் தூக்கி வைத்து ஆயிரம் கதைகள் ஏன் எழுத முடியாமல் போனது என்று கூட யோசித்திருக்கிறேன். நான் எழுத்தாளினி ஆனதே அழுத்திக் கொண்டிருந்த இந்த மறக்க முடியாத காட்சிகளால்தான் அதற்காகத்தான் நான் எழுதவே வந்தேன். அதனால்தான் எழுதிக் கொண்டே இருக்கின்றேன். அதை விட்டு இப்போது நான் தாவமுடியாது. ஆனால் நான் நிறுத்திக் கொள்வேன். அந்தக் கெட்ட காட்சிகள் முற்றாக என்னிடம் இருந்து மறையும்போது துரு துருத்திக் கொண்டிருக்கும் நினைவுகளை இழக்கும் போது நிச்சயமாக நிறுத்திக் கொள்வேன்.

'என்ன பலமான யோசனை...", என்றபடி அருகில் இருந்த நாற்காலியை இருந்து எதிரில் போட்டுக் கொண்டு இருந்தான் அறிவழகன். அவன் வந்ததைக் கூட நான் கவனிக்கவில்லை. புன்னகைத்துக் கொண்டே 'வழமையா இருக்கிற மாதிரித் தான் இண்டைக்கும் இருக்கிறன்", என்று பதில் சொன்னேன். இவ்வளவு நேரம் இதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வருவதற்கு இப்போது தான் அவனுக்கு நேரம் கிடைத்திருக்கிறது.

"வழமையா இருக்கிறதை விடவும் இண்டைக்கு கொஞ்சம் அழகாய்த்தான் தெரிகிறாய்" என்றான்.

என்னைக் காணும் எல்லா நேரமும் அவன் அலுக்காமல் சொல்லும் ஒரே வசனம் அதுதான். கேட்டுக் கேட்டு சலித்திருந்தாலும்கூட கேட்காமல் போனால் அன்றைக்கு முழுவதும் எனக்குள் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பேன். ஒருவித விரக்தி என் மேல் எனக்கே உருவாகி இருக்கும். கடைசியாய் எனக்கென்று இருக்கும் ஒரே ஆறுதல் அவன் தான். அவன் மட்டும்தான்.

"...." என்று விசனப்பட்டுக் கொள்வதைப் போல பாசாங்கு செய்து கொண்டேன். அவன் அதையெல்லாம் பொருட்படுத்தவே மாட்டான். அடுத்து என்ன சொல்லுவான் என்று எனக்குத் தெரியும் இந்தக் கண்களைப் பற்றித்தான். பார்வை பறிக்கப்பட்ட பின், இருக்கும் என் ஒரே ஒரு கண்ணைப் பற்றி அவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அதே கண்ணைப் பற்றித் தான் பேசப் போகின்றான். அதைப் பற்றிப் பேசாதே என்று மனதுக்குள் வேண்டினேன். அவன் சொல்வது எல்லாம் என் மகிழ்ச்சிக்காக என்று புரிந்தாலும் கூட... என் குறையை ஞாபகப்படுத்துவது போலவே அது இருக்குமே! அதற்காக அதைப் பற்றிப் பேசவே வேண்டாம்.

அவன் அதைப்பற்றிப் பேசவில்லை. "நான் வரும் போது என்ன எழுதிக் கொண்டிருந்தாய்?" என்றான்.

"புதுவிதி பத்திரிகையில் சிறுகதைப் போட்டிக்கு விளம்பரம் வந்திருக்கு. சில ஆயிரம் ரூபாய்கள் பரிசுத் தொகை ஏதாவது எழுதுவம் எண்டு யோசிச்சன். அப்புறமா ஒரு கதை எழுதிக் கொண்டிருக்கிறன் கிட்டத்தட்ட முடியப் போகுது."

'ஓ! இனியாவது சனங்களுக்கு நல்ல விதி அமையட்டும் எண்டு நினைச்சுத்தான் இந்தப் பெயர் வைச்சிருப்பாங்கள் போல பத்திரிகைக்கு எண்டால் நல்ல கருத்தாதானே எழுதவேணும். நீதான் சரியான கெட்டிக்காரி ஆச்சே...! சரி என்ன கதை நான் படிச்சுப் பாக்கட்டுமா!" என்று கேட்டான்.

"கண்டிப்பா தாறன் பத்து நிமிசம் சத்தம் போடமல் இருந்தால் தாறன்."

"இது என்ன கோதாரி ஏன் பத்து நிமிசம் சும்மா இருக்க வேணும்."

"எழுதி முடிக்க வேணாமா...?"

"அதெல்லாம் நான் போன பிறகு எழுதலாம்"

"ஒரே அவசரம்", என்ற படி முடிக்காத கதையின் சில பக்கங்களை அவன் கையில் கொடுத்தேன். அவன் வேகமாகப் படிக்க ஆரம்பித்தான். அவன் சிரித்த முகம் இப்போது புன்ன கையை இழந்தது சற்று நேரத்தி லேயே அவனுக்குள் முழு மௌனம் உண்டாகி இருந்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)

# புதுவிதி போட்டிச் சிறுகதைகள் - ஓர் இரசனைக் குறிப்பு

# சொ. நித்தியாவின் “பிறந்தமண்”

■ உடுவில் அரவிந்தன்

பிறந்த மண்ணைப் பற்றிய நினைவுகளுக்குள் ஊடாடுவது தனிச்சுகம். ஒவ்வொருவரினதும் இளம்பிராயத்து அனுபவங்களின் திரட்சியும் மீண்டும் வரமுடியாத நாள்களின் தித்திப்பும் அலாதியானவை. அமைதியாகக் கழிகின்ற இரவுகளில், தனிமையின் நெடியகணங்களில் கண்களை மூடியபடி மீட்டக்கூடிய அருமையான இசையைப் போன்றவை. நித்தியாவின் இந்தச் சிறுகதையும் ஏறக்குறைய அதே உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது எனலாம்.

சங்கரப்பிள்ளையர் லண்டனில் மகன் வீட்டில் இருபத்தொரு வருடங்கள் எள்ளாகக் காய்ந்திருக்கிறார். ஆனாலும் அவருடைய ஒரே மகள் குடும்பத்துடன் இங்கேயே வாழ்கிறாள். ஊரைப் பார்க்கும் ஆசைகளுடன் திரும்புகின்ற சங்கரப்பிள்ளையருக்கு எல்லாமே புதிதாகத் தோன்றுகின்றன. கொடூரமான யுத்தத்தின் வடுக்கள் ஆங்காங்கே தென்பட்டாலும் செயற்கையான மாற்றங்கள் கண்களை உறுத்துகின்றன. அந்த மாற்றங்களை நிராகரித்தபடி எஞ்சிக்கிடப்பவற்றிலே பழைமையின் சுவடுகளைத் தேடுகின்றார்.

“அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த அழகிய வேலிகளையும் அதில் செழித்து வளர்ந்து பசுமை தந்த மரங்களையும் அதில் ஓடும் அணில்களையும் கரையும் காகங்களையும் ஆசைதீரப் பார்த்துக் கொண்டார்” என்ற வரிகளினூடாக அவருடைய ஏக்கங்கள் அழகாக வெளிப்படுகின்றன.

சங்கரப்பிள்ளையரின் கனவுகளின் பட்டியல் நீளமானது. பழைய நண்பர்களைச் சந்திக்கவேண்டும். துலாவைப் பதித்துக் கிணற்று நீரையள்ளிக் குளிக்கவேண்டும். இடியப்பம், தோசை போன்ற ஆகாரங்களை ருசித்துத் தின்னவேண்டும். ஒடியற்கூழ் குடித்து இன்புற வேண்டும். இப்படியாக யோசித்துக் கொண்டு வந்தவருடைய ஆசைகள் பெரிதாக நிறைவேறவில்லை.

சலவைக்கற்களால் இழைக்கப்பட்ட குளியலறையில் அடைபட்டுத் திணறவேண்டிய நிர்ப்பந்தம். உரல்,' உலக்கை, அம்மி, திரிகை, ஆட்டுக்கல் என்று எதுவுமற்ற நிலை. சாணி மெழுகிய அடுப்புக்குப் பதிலாக வாயு அடுப்பு. அவைபோதாதென்று காலையுணவாக வழங்கப்படும் நூடில்ஸ் அவருக்கு முன்னாலிருந்து முறைத்துக் கொண்டிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை லண்டனும் சொந்த ஊரும் ஒன்றாகத் தெரிகின்றன. ஏமாற்றம் பெருஞ்சுமையாக அழுத்துகின்றது.

“இங்கே சுவாத்தியம் படுமோசம். இன்னும் பத்து நாளிலை நான் அங்க வந்திடுவேன். விபரம் பிறகு தெரிவிக்கிறன்” என்று மகனுடன் தொலைபேசியில் உரையாடுவதாகக் கதை முடிகின்றது.

இன்றைய உலகில் நவீன தொழிநுட்ப மாற்றங்களோடு இசைந்தோடுதல் தவிர்க்கவியலாதது. அவை பற்றிய அறிவினையும் வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமானது. இல்லையேல் நாம் மற்றவர்களை விட நெடுந்தூரம் பின்தங்கி நின்றுவிடுவோம். அதற்காக மாற்றங்களென்று சொல்லி எங்களுடைய மேன்மையான பாரம்பரியங்களைப் படிப்படியாகச் சிதைக்கின்ற போக்கினை ஒருபோதுமே ஏற்றுக் கொள்ளமுடியாது. புதியனவற்றை வரவேற்கின்ற அதேவேளை, பழையனவற்றையும் போற்றிப் பராமரிக்கவேண்டும். அதுவே காலத்தின் தேவையாகும்.

இனம் மற்றும் மொழி ரீதியான அடக்குமுறைகளுக்கெதிரான எழுச்சிக்காலத்தில் எம்மவர்கள் ஒவ்வொரு துறைகளிலும் நிகழ்த்திய உச்சமான சாதனைகள் பழங்கதைகளான அவலம். அடுத்தகணம் உயிர் வாழ்தல் நிச்சயமற்றிருந்த நிலைமைகளிலும் புலம்பெயர்ந்து போகாமல் ஓர்மத்துடன் இங்கேயே வாழ்ந்த மக்கள் தங்களுடைய கலைகளையும் விழுமியங்களையும் சிறப்பாகப் பாதுகாத்திருந்தார்கள். அதற்குகந்த நம்பிக்கையான சூழ்நிலை அப்போதிருந்தது. ஆனால் காலம் எல்லாவற்றையும் ஒரேயடியாகப் புரட்டிப்போட்டுவிட்டது.

“இங்கே சுவாத்தியம் படுமோசம்” என்ற பிரயோகம் எங்கள் முகத்தில் ஓங்கி அறைகிறது. அத்தகைய மோசமான நிலைக்குக் காரணங்கள் எவையென வாசகர்களைச் சிந்திக்க வைத்தமையே பிறந்தமண் சிறுகதையின் சிறப்பாகும்.

---

## மௌனமாய்...

(18ஆம் பக்கம் பார்க்க)

இடையிடை என்னைப் பார்த்தான். அவன் கண்கள் பனித்தன. அவன் சோக நாடகத்தையும் அதன் அவலத்தையும் உணர்ந்தவன் போல அந்த வெளிக்குள் மூழ்கி பிரமை பிடித்தவனாய் இருந்தான். இதெல்லாம் என் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது என்பதை அவனுக்குச் சொல்லிக் காட்ட வேண்டிய தேவையில்லை.

ஒரு பெருமூச்சு விட்டபடியே என்னிடம் திரும்பத் தந்தான். நீண்ட நேரம் எதுவும் பேசவில்லை.

நான் எழுதும் எல்லாவற்றையும் பார்த்து விட்டு இப்படித் தான் இருப்பான்.

“உன் கையெழுத்து வரவர அழகாகிக் கொண்டே வருகிறது” என்றான்.

‘இருக்கிற கையால்தானே எழுத முடியும். எல்லா நேரமும் உன்னையே எதிர்பார்த்துக் கொண்டு இருக்க முடியாது தானே! அது சரி கதை எப்படி இருக்கிறது எனக்குத்தானே பரிசு கிடைக்கும்” என்றபடி சிரித்தேன்.

“இதை நீ பரிசுக்காகவா எழுதினாய்! அவன் அசட்டையாகச் சிரித்தான்”, படித்தபோது நான் அழுதன் தெரியுமா! என்னை அழச் செய்யாமல் உன்னால ஒரு கதைகூட எழுத முடியாதா...? எல்லாவற்றையும் மறக்கத்தான் எப்போதும் விரும்புகிறார்கள். நீ ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறாய். இதிலிருந்து நீ வெளியால வர வேணும். வேறு எதையாவது எழுது அல்லது எழுதுவதை நிறுத்தினால்தான் கொஞ்ச நிம்மதியாவது உனக்குக் கிடைக்கும் என்று எத்தின தடவை சொல்லியிருக்கிறன்”, என்றான்.

பதிலுக்கு நானும் அசட்டுப் புன்னகையை உதிர்த்தேன். எதையும் கேட்க மாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். அன்றைக்குக்கூட அத்தனை பேர் தடுத்தும் கேட்காமல் கொள்கையே குறியாக முன்னுக்குப் போய் நின்றிருக்கிறேனே. எனக்கு எழுதுவதுதான் நிம்மதி. எழுதித் தீர்க்க முடியாதுதான் இன்னும் நிறைந்து வழிகின்றது. எல்லாம் வலிகள், காயங்கள் ஆறாதவை. பெண்களும் குழந்தைகளும் ஏன் ஒரு சந்ததியே சீரழிந்த கதை. சிதைந்த உடல், இரத்தம் காணமல் போன உயிர்.

பெருமூச்சொன்றை வெளியே விட்டு புன்னகையை வரவழைத்துக் கொண்டே உன் எழுத்துக்களுக்கு இந்தப் பரிசுகள் எல்லாம் சாதாரணம். உனக்கு புக்கர் விருதே தரலாம் அதை விட வேறு ஏதும் இருக்கிறதா! என்று உச்சி குளிர்வித்தான். நான் மெல்ல சிரித்தேன். இந்தப் பொய்களுக்காகவே அவனை எனக்குப் பிடிக்கிறது. எழுந்து ஓடி முத்தம் கொடுக்கவும் விருப்பம் தான். ஆனால் அவன் என்ன நினைப்பானோ!

**எதிர்காலம்**

படைப்புக்கள் நிலைக்கும்...! யாரும் எதையும் மறக்க மாட்டார்கள்...!!

---

## முள்ளிவாய்க்கால்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து, விடப்பட்ட மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், இச்செயல்களுக்காக இலங்கை அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. காலம் வேகமானது - அது விதிக்கும் கட்டளைக்கு யாரும் அடிபணிந்துதான் ஆகவேண்டும். அமெரிக்காவுக்கு தோன்றிய மனச்சாட்சி - நெருக்கடி இப்போது இல்லாவிட்டாலும் இலங்கை அரசாங்கத்துக்கும் தோன்றலாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமானால் அவர்கள் வெறுமனே மன்னிப்பு என்று கோராமல், எமது மக்கள் அவலங்களை சந்தித்த முள்ளிவாய்க்கால் மண்ணில் - போர் வடுக்களை பாதுகாத்து வைத்திருக்கும் இடத்தில் கோர வேண்டும்.

நமக்கு - நம்மினத்துக்கு நேர்ந்த துன்பத்தின் - அவலத்தின் குரல்கள் காலத்துக்கும் ஆவணமாக ஒலிக்க வேண்டும். அதற்கு முதல் தேவை முள்ளிவாய்க்கால் ஆவணக் காப்பகம்.

நன்றி: நிமிர்வு அரசியல், சமூக இதழ்

---

## வவுணதீவு...

(06ஆம் பக்கம் பார்க்க)

செயற்பாடுகளை முடக்க மனித உரிமைகள்அமைப்புக்கள் முயன்றன எனவும், தான் அதை அனுமதிக்கவில்லை எனவும் பெருமைப்பட்டுக் கொண்டார்.

அஸ்கிரிய பீடாதிபதி சிறையிலடைக்கப்பட்ட புலனாய்வாளர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

ஆனால், சில புலனாய் வாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டி ருப்பது பயங்காரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக அல்ல என்பதும் கப்பம் கோரி இளைஞர்களைக் கடத்திக் காணமல் ஆக்கிய குற்றச் சாட்டில் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, வவுணதீவுப் படுகொலையினதும் உண்மைச் சூத்திரதாரிகள் யார் என்பதும், குண்டு வெடிப்புகளுக்கு துணை நின்ற முக்கிய புள்ளிகள் யார் என்பதும் கண்டு பிடிக்கப்பட்டு உண்மைகள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் வெகு குறைவாகவே காணப்படுகின்றன.



■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 77

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

எறிகணை வட்டம் முன்னோக்கி நகரப் படையினர் டாங்கிகள் சகிதம் முன்னேறி பறங்கியாற்றில் இறங்கி அதைக் கடந்தனர். எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் இருக்கவே அவர்கள் துரிதமாக முன்னேற ஆரம்பித்தனர். அவர்கள் வெள்ளாங்குளம் எல்லையை நெருங்கும்வரை ஒரு சிறு எதிர்ப்பைக் கூடச் சந்திக்கவில்லை.

திடீரென முன்னால் வந்த டாங்கி ஒன்றின் செயின் ஆர்.பி.ஜி. அடியில் பத்து அடி மேலெழுந்து கீழே விழுந்தது. இன்னொரு டாங்கியின் சுடுகுழல் எகிறப்பட்டு தூரத்தே போய் விழுந்தது.

படையினர் மிகவும் அவதானமாகவே தங்கள் நகர்வை மேற்கொண்டிருந்தனர். டாங்கிகள் இரண்டு, கவச வாகனங்கள் இரண்டு என்பவற்றின் துணையுடன்மூன்று அடுக்கு வடிவமைப்பில் ஒவ்வொரு வரிசையும் ஒன்றன்பின் ஒன்றாக முன்னேறின. இரு அணிகள் படுத்து காப்புக்கொடுக்க ஒரு அணி ஓடிச்சென்று முன்னால் படுப்பதும், பின்பு அடுத்த அணி குனிந்து ஓடி முன்னால் படுப்பதும் என மாறி மாறி செயற்பட்டவாறு முன்னேறினர்.

காகம், குருவி கூடக் காணப்படாமல் அப்பிரதேசம் வெறிச்சோடிப் போயிருந்த போதிலும், படையினர் மிக்வும் எச்சரிக்கையாகவே நகர்வை மேற்கொண்டனர். திடீரென நிலமட்டத்திலிருந்து வெளிவந்த ஒளிக்கீற்றுக்கள் இரு டாங்கிகளையும் செயலிழக்க வைக்கவே அதிர்ந்துபோயினர். குனிந்து ஓடியவாறு முன்னேறிய படையினரில் பலர் பொத்து பொத்தென விழுந்தனர்.

நிலமட்டத்துடன் நிலத்திற்கு சமாந்தரமாகப் பாய்ந்த ரவைகள் படுத்திருந்த படையினரைப் பதம் பார்த்தன. கிரனைட்லோஞ்சர்கள் கக்கிய கைக்குண்டுகள் படையினர் நடுவில் வெடித்துச் சிதறின. இராணுவப் படையணிகளின் மேஜர்களும் லெப்ரினன்ட்களும் எதைக் கட்டளையிடுவது எப்படிக் கட்டளையிடுவது என்று தெரியாமல் தடுமாறினர்.

கவச வண்டிகள் கூட என்ன செய்வது எனத் தெரியாமல் பின் வாங்க ஆரம்பித்தன. நாலு பக்கமிருந்தும் வேட்டுக்கள் பறந்து வந்தனவேயொழிய ஒரு போராளியைக் கூடக் கண்ணில் காணமுடியவில்லை. ஒவ்வொரு பத்துப் பன்னிரண்டு பேர் கொண்ட இராணுவ அணிகளும் தனித்தனியாகத் தாம் சுற்றிவளைக்கப்பட்டு விட்டதுபோன்று உணரும் வகையிலேயே தாக்குதல் தொடுக்கப்பட்டது.

ஆனால், போராளிகள் நிலக்கீழ் பாம்பு பங்கர்களில் நின்று ஓடி ஓடி தமது நிலைகளை மாற்றி மாற்றிச் சுட்டுக் கொண்டிருந்தனர். அவை நிலமட்டத்துடன் நன்றாக முள்ளுச் செடிகளாலும் புல்லுக் கற்றைகளாலும் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தமையால் படையினரால் அவற்றை அடையாளம் காணமுடியவில்லை. பின்வாங்கிய கவச வண்டியொன்று தலைகுப்புற பொறிகிடங்கொன்றில் விழுந்தது. அதற்குள்ளிருந்து வெளியேறிய படையினரை அறுபது மி.மீ. உந்துகணை ஒன்று பதம் பார்த்தது.

ஏறக்குறைய அறுநூறு பேரைக் கொண்ட படையணி ஒவ்வொரு விநாடியும் அளவுகணக்கற்ற படையினரைப் பலிகொடுத்துக் கொண்டிருந்தது. நிலைமையைப் புரிந்துகொண்ட களமுனைத் தளபதி உடனடியாகவே படையினரைப் பின்வாங்கும்படி கட்டளையிட்டான். அதுகூட அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. படையினரின் பின்புறமாகப் போராளிகள் எறிகணைகளால் வேலியமைக்கத் தொடங்கினர்.

படையினரும் போராளிகளும் அருகருகே நின்று போரிட்டமையால் இராணுவத்தால் எறிகணைத் தாக்குதலோ விமானத் தாக்குதலோ நடத்தமுடியவில்லை. எனவே அவர்களின் கட்டளைப்பீடம் உடனடியாக இழப்புக்களைப் பொருட்படுத்தாமல் பின்வாங்கும்படி உத்தரவிட்டது. படையினர் எறிகணைகளையும் பொருட்படுத்தாமல் பறங்கியாற்றைக் கடந்து பின்வாங்கத் தொடங்கினர்.

போராளிகளின் கட்டளைப்பீடத்திலிருந்து பின்வாங்கும் படையினரைத் தொடர்ந்து துரத்திச் செல்ல வேண்டாம் எனவும், ஒரு போராளிகூட விடாமல் நாச்சிக்குடா நோக்கி காடுகளுக்கால் பின்வாங்கும்படியும் உத்தரவு வந்தது. போராளிகள் பங்கர்களை விட்டு வெளியே வந்து காட்டுப் பக்கமாக நகரத் தொடங்கினர்.

அடுத்து ஐந்து நிமிடத்தில் கிபிர் விமானங்கள் திருமலையிலிருந்து புறப்பட்டு விட்டதாகவும் போராளிகளைக் காடுகளுக்குள் பாய்ந்து மறைவாகப் பின்வாங்கும்படியும் அறிவித்தல் வந்தது. பத்து நிமிடங்களில் போராளிகள் காடுகளுக்குள் பாய்ந்து வேகமாக நாச்சிக்குடா நோக்கிப் பின்வாங்க ஆரம்பித்தனர்.

பத்து நிமிடங்களில் விமானங்கள் வந்துவிட்டன. அதற்குள் போராளிகள் களமுனையிலிருந்து நீண்டதூரம் பின்வாங்கிவிட்டனர். ஏறக்குறைய ஒரு மணி நேரமாக இரண்டு, இரண்டு விமானங்களாக வந்து மாறி மாறிக் குண்டுகளைப் பொழிந்தன. போராளிகள் விமான எதிர்ப்புத் தாக்குதல்கூட நடத்தவில்லை. விமானங்கள் விருப்பம்போல் குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

ஆனால் போராளிகளின் ஓர் அறுந்த செருப்பைக்கூட அழிக்க முடியவில்லை. மாறாக படையினரால் கைவிடப்பட்ட டாங்கிகளையும் கவச வாகனங்களையும் நொருக்கித்தள்ளின. விமானங்கள் தங்கள் அட்டகாசங்களை முடித்துச் சென்ற பின்பு சண்டை இடம்பெற்ற பகுதியை நோக்கி இரவு முழுவதுமே எறிகணைகள் தொடர்ந்து வீசப்பட்டன.

மாலை வேளையில் இரு விமானங்கள் வந்து முழங்காவில் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசின. ஒரு குண்டு மருத்துவமனையை நிர்மூலமாக்கியது. அவ் ஊரில் மக்கள் மட்டுமல்ல மக்கள் வளர்த்த நாய்கள் கூட வெளியேறிவிட்டன என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. விமானங்கள் வந்து வெள்ளாங்குளம் பக்கமாகக் குண்டுகள் பொழிய ஆரம்பித்த சிறிது நேரத்தில் சிங்காரம் மாஸ்ரரின் படையணி நாச்சிக்குடாவுக்குத் திரும்பிவிட்டது.


இப்பெரும் வெற்றித் தாக்குதலை நடத்தி முடித்துவிட்டு நாச்சிக்குடாவுக்குப் பின் வாங்கிய சிங்காரம் மாஸ்ரரின் சிறப்புப் படையணி உடனடியாகவே ஒருங்கிணைப்புத் தளபதியிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் இடத்திற்குப் புறப்பட்டுவிட்டது. இப்பெரும் சமரில் இரண்டே இரண்டு போராளிகளுக்குச் சிறு காயங்கள் மட்டும் ஏற்பட்டிருந்தன. ஒரு போராளி கூட வீரச்சாவடையவில்லை என்ற வியம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# மலரும் மணமும்

மலர் என்றால் நறுமணம் வீசுவது இயற்கை. துர்நாற்றம் அடிப்பது அசாதாரணம். ஆனால் அப்படியும் ஒரு பூ இருக்கிறது. சமீபத்தில், சுவிஸ் நாட்டின் சூரிச் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பூங்காவில் மலர்ந்துள்ள Amorphophallus Titanum என்ற பெயர் கொண்ட பூதான் உலகின் மிகப் பெரிய பூவாகும். அது மட்டுமல்ல இது மலர்ந்தால், சுற்றுப்புறங்களில் பிணவாடை அடிக்கும். அந்த அளவுக்கு மோசமான மணத்தைக் கொண்டது இந்த மலர்.

மூன்றரை அடி உயரம் வரை இந்த மலர் வளரக்கூடியது. இதற்கு முன்பு 2014 இல் பாசல் நகரிலுள்ள உயிரியல் பூங்காவில் இப்படியொரு பூ பூத்திருந்தது. இந்தப் பூவின் பிறப்பிடம் சுமத்திரா தீவின் மழைக்காட்டுப் பிராந்தியம் என்கிறார்கள். குறைந்த பட்சம் 7 வருடக் காத்திருப்பின் பின்னரே, இந்த மலர் பூக்கும் என்பது இதன் தனித்துவம்.



## குப்பைகளின் சிகரமா எவரெஸ்ட்?

நேபாள அரசு மற்றும் சில தொண்டு நிறுவனங்களால், கடந்த 2 வாரங்களில் மட்டும் எவரஸ்ட் சிகரத்திலிருந்து சுமார் 3 தொன் குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நியூசிலாந்தை சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளத்தை சேர்ந்த டென்சிங் ஆகிய இருவரும் கடந்த 1953 ஆம் ஆண்டில் உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை தொட்டனர். இதன் நினைவாக, எவரெஸ்ட் சிகரத்தை தூய்மைப்படுத்தும் திட்டத்தை நேபாள அரசு கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி, 14 பேர் கொண்ட துப்புரவுக் குழுவுடன்



தொடங்கியது. மலையேறும் வீரர்கள் விட்டு சென்ற சமையல் பொருட்கள், கூடாரங்கள், கைவிடப்படும் மலையேறும் சாதனங்கள், கூடாரங்கள், எரிவாயுக் கலன்கள் ஆகியவை அங்கு குப்பைகளாகக் குவிகின்றன. ஒன்றரை மாதத்திற்குள் 10,000 கிலோ குப்பையைச் சேகரிப்பதுதான் குழுவின் இலக்கு! சாதிப்பார்களா?

## வாழைப்பழ ஓவியமா? வேண்டாமே

தூரிகைகள் ஆபத்தானவையாகவும் மாறலாம். போலந்து நாட்டின் தலைநகர் வார்சோவில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் நடாலியா எல்எல், என்கிற பெண் ஓவியரால் வரையப்பட்ட ஓவியம் நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த ஓவியம், பெண் ஒருவர் 12 விதமாக வாழைப்பழத்தை சாப்பிடுவது போன்று அமைந்திருக்கும். அண்மையில் இந்த அருங்காட்சியகத்தின் புதிய இயக்குநராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட ஜெர்சி மிசியோலெக் என்பவர், வாழைப்பழ ஓவியம், இளைஞர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் இருப்பதாக கூறி அதனை அருங்காட்சியகத்தில் இருந்து அகற்றி விட்டார். நூற்றுக்கணக்கானவர்கள் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்யும் விதமாக வாழைப்பழம் சாப்பிடுவது போன்று 'செல்பி' எடுத்து 'பேஸ்புக்', 'டுவிற்றர்' உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

வாழைப்பழத்தை வாழவிடு...!




## சீனாவில் இன்னொரு பிரமாண்டம்

சகல துறைகளிலும் அசுர வளர்ச்சி காணும் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் சர்வதேச தோட்டக்கலை கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. இந்த கண்காட்சி ஒக்ரோபர் 7 வரை 162 நாட்கள் நடைபெறும். இந்தக் கண்காட்சிக்காக ஒரு பிரமாண்ட பூங்காவை, பீஜிங்கின் 'நியூ சில்க் ரோட்' பகுதியில் அமைத்துள்ளார்கள். உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய வடிவமைப்பாளர்களான ஜேம்ஸ் ஸ்மித், ஜோன் ஸ்ருவர்ட் ஸ்மித் ஆகியோர் இணைந்து பார்ப்பவர் வியக்கும் வண்ணம் இந்தப் பூங்காவை வடிவமைத்துள்ளனர். இந்த பூங்காவானது இதய வடிவமைப்பைக் கொண்டுள்ளது.

இந்த கண்காட்சியில் 110 நாடுகளில் இருந்து சர்வதேச அமைப்புகள் இதன் தொடக்க விழாவில் கலந்துகொண்டன. பீஜிங்கில் கடுமையான வறட்சி நிலவிவரும் நிலையில் தண்ணீரை சேமிக்கும் வகையில் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 28 ம் திகதி நடைபெற்ற இந்த பூங்காவின் தொடக்க விழாவில் பல்வேறு விதமான கலைகள், நடனங்கள், மற்றும் மேடை அலங்காரங்கள் என பீஜிங் தலைநகரமே விழாக்கோலத்துடன் காட்சியளித்தது.

எதைத்தான் விட்டு வைக்கின்றது சீனா?



உருகும் உலகில்



## பணக்காரனின் பிச்சைக்காரத்தனம்...!

பணமிருந்தும் பிச்சை எடுப்பவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்பது ஆச்சரியமானதுதான். வங்கியில் 5 இலட்சம் ரூபா பண இருப்பு, மூன்று வீடுகளுக்கு சொந்தக்காரன். ஆனால் கடந்த 25 வருடகாலமாக கொழும்பு ரயில் நிலையத்தில், ஒரு கபோதியாக பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறார் ஒருவர்.

கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு, கம்பஹா சென்றுவரும் ரயிலில் ஏறி, தினமும் பயணிகளிடம் பிச்சை கேட்பது, இவரது கடந்த 25 வருடகால தொழிலாக இருந்துள்ளது. அதிகாரிகளிடம் இவர் மாட்டிக் கொண்டபோது, கைவசம் ரொக்கமாக 4000ரூபா பணம் இருந்துள்ளது. தனது "உழைப்பில்" கட்டிய இரண்டு வீடுகளையும், தன் பெண்பிள்ளைகள் இருவருக்கும் கொடுத்துள்ள இவர் தற்போது கட்டிக் கொண்டிருக்கும் மூன்றாவது வீட்டை, வாடகைக்கு விடத் திட்டமிட்டிருந்தாராம்.

குருடனாக நடித்துக் கொண்டு, மாதம் ஒன்றரை இலட்சம் ரூபாவை தன்னால் "சம்பாதிக்க" முடிந்தது என்கிறார் இவர். இவர் கைது செய்யப்பட்டதை அறிந்து, அவரை விடுவிக்க, தனது சொந்தக் காரில் பொலிஸ் நிலையத்தில் வந்திறங்கி இருக்கிறார் இவரின் மகள்!

# ஆரிட்டை சொல்லி அழ?



### இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### காட்டிக் குடுக்கிறதுதான் இலேசான வியாபாரம் முப்பது வருசமாச் செய்த தொழில் எல்லே!

யாழ்ப்பாண யூனிவசிட்டிக்கை தலைவற்றை படம் கிடந்தது. ஆமிக்காரர் போடுற சப்பாத்துக் கிடந்தது. வேறை ஏதேதோ சாமான்களும் கிடந்தது எண்டு சொல்லி அங்கை படிக்கிற பெடியளைப் பிடிச்சுக் கொண்டு போயிருக்கிறாங்கள். இப்ப அவையளை நீதிமன்றத்திலையும் கொண்டு வந்து நிப்பாட்டியாச்சு. ஆமி மாற்றை கடமை உணர்ச்சியைப் பாராட்டுறம்.நல்ல விசியம் நடந்திருக்கெண்டு ஆசுவாசப்படுவம்.

படமும் கிடந்தது. பணியாரமும் கிடந்தது எண்டு சொல்லிப் பெடியளைப் பிடிக்கினம். கொழும்பு குண்டு வெடிப்புக்குப் பின்னாலை ஆரைப் பிடிச்சவை. அப்பாவி முஸ்லிலிங்களைப் பிடிச்சு நலமெடுத்தால் சரியா வந்திடுமோ? சூத்திரதாரியளை எல்லோ பிடிக்க வேணும். குண்டு கட்டிப் பாஞ்சதுக்குப் பின்னாலை கன முஸ்லிலிம் தவளையள் இருக்கெண்டு பல பேர் சொன்னாப் பிறகும் ஒண்டும் நடக்கேல்லை. ஆரையும் பிடிக்கேல்லை. பல தலையளின்ரை சொந்தக்காரற்றை வீடுகளிலை சாமான்கள் பிடிபட்டிருக்கு. எட இத்தினை சனம் செத்திது. எத்தினை கோடி நட்டப்பட்டிருக்கு. நாட்டை மற்றப் பக்கம் திருப்பிப் போடுற மாதிரிப் பல சம்பவங்கள் நடந்திருக்கு. பிடிபட்ட சாமான்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கோடி கோடியா நாட்டுக்கை காசு வந்திருக்கு. சுதந்திரமா முஸ்லிலிம் பெடியள் பயிற்சி எடுத்திருக்கினம். அவங்களின்ரை பெரிய தலை எண்டு சொல்லக் கூடிய ஆக்கள் எல்லாரும் கண்ட கண்டபடி ஊரைச் சுத்தித் தண்ணீர் பந்தலுக்குக் காசு சேர்க்கிறமாதிரி காசைச் சேத்துக் கொண்டு வந்திருக்கிறாங்கள். உதெல்லாம் இலங்கைச் சீ.ஐ.டியின்ரை கண்ணுக்கை படேல்லையோ? யாழ்ப்பாணம் யூனிவசிட்டியிலை கிடந்த படமும் சப்பாத்தும் தான் அவையின்ரை கண்ணுக்கை குத்தியிருக்கு. உதைக் கேக்கை நெஞ்சுக்கை வேகுது. எல்லாம் புளுடா விளையாட்டாக் கிடக்கு.

குண்டை வெடிக்கிறதுக்காக காக்காமார் காசை வைச்சுச் சரியாத்தான் விளையாடி இருக்கிறாங்கள். நான் நினைக்கிறன் உவங்கள் கோவில் திருவிழா நோட்டீஸ் குடுக்கிறமாதிரித்தான் காசை எறிஞ்சு விளையாடி இருக்கிறாங்கள் எண்டு. உதிலையும் ஒரு விளையாட்டு நடந்ததாக் கதைக்கினம். துவங்கேக்கை எல்லாரும் ஒண்டாத்தான் துவங்கினவங்களாம். பிறகு அவங்களுக்கை குழப்பம் வந்திட்டுதாம். கட்சியள் பூந்திட்டுதாம். புலனாய்வும் பூந்திட்டுதாம். காசு ஆசை வந்திட்டுதாம். வேறை வேறை விசியங்களும் உள்ளுக்கை வந்ததாலைதான் குண்டை முன்னுக்கு வைக்கிறதோ? பிறகு தள்ளி வைக்கிறதோ? ஹோட்டலுக்கு வைக்கிறதோ? பள்ளிக்கு வைக்கிறதோ? பள்ளிக்கூடத்துக்கை வைக்கிறதோ? கோயிலுக்கை வைக்கிறதோ? சேச்சுக்கை வைக்கிறதோ? எண்டு குழம்பிப் போனதாலைதான் குண்டுப் பெடியள் பதகளிச்சுப் போனாங்களாம்.

மற்றது குண்டு வைக்கிறதை அவை சிம்பிளா நினைச்சிட்டுக் காவடி எடுக்கப் போய்த்தான் இப்ப கன பேரைக் காவு குடுத்திருக்கினம். அதுக்கையும் செல்வாக்கானவங்கள் தப்பீட்டாங்கள் போலை கிடக்கு. சாமான் கட்டப் பெட்டி வாங்கிக் குடுத்தவையளும், கயிறு வாங்கிக் குடுத்தவையளும், வான் பிடிச்சுக் குடுத்தவையளும்தான் மாட்டி இருக்கினம். முதலையள் எல்லாம் வெகு சௌகரியமா ஊரைச் சுத்திக் கொண்டு திரியினம் எண்டு கதைக்கினம்.

எனக்கு ஒண்டு விளங்கேல்லை. ஏன் உவங்கள் இந்து சமயப் பெட்டையளைக் கலியாணஞ் செய்து பிள்ளையளையும் பெத்துப் போட்டு அதுகளைக் கொண்டு போய்ச் சாக்காட்டினவங்கள். உதை நினைக்க ஆச்சரியமாக் கிடக்கெல்லே? பிற சமய ஆக்களைத் தங்கடை சமயத்துக்கு மாத்தினால் அவைக்குச் சொர்க்கத்துக்குப் போகலாம் எண்டு ஆரோ கதைச்சவை. அது உண்மையோ எண்டு தெரியாது.

ஆனால் என்னத்தைச் சொன்னாலும் அவையின்ரை சமயத்துக்கை தடவினவங்களாம். குண்டு கட்டிப் பாயச் சொல்லி ஒரு இடத்திலையும் சொல்லேல்லையாம். எந்த உயிரையும் அநியாயமாக் கொல்லப்பிடாது எண்டுதான் சொல்லி இருக்காம். அப்ப உந்தக் கிரிச கெட்ட பழக்கத்தைச் செய்யச் சொல்லிச் சமயம் சொல்லேல்லை எண்டால், பிறகேன் சமயத்தைச் சொல்லிக்கொண்டு கறுத்த உடுப்பையும் போட்டுக் கொண்டு சத்தியப்பிரமாணம் எடுத்தவங்கள். கடவுளின்ரை பெயராலை ஆரையும் அதர்மத்தைச் செய்ய விடப்பிடாது.

இப்ப கொஞ்சம் கொஞ்சமாத்தான் கதை வெளியிலை வருகிது. அவையின்ரை ஆக்கள்தான் அவையளைக் காட்டிக் குடுத்திருக்கினம். அப்ப தங்கடை ஆக்களிலை பிழை இருக்கெண்டு தெரிஞ்சபடியாலைதானே அவையள் காட்டிக் குடுத்தவை. காட்டிக் குடுத்தவைக்குக் கவன்மென்றாலை காசும் குடுத்திருக்கினம். ஆனபடியாலை காட்டிக் குடுக்கிறதுதான் இலேசான வியாபாரம். காட்டிக் குடுக்கிறது அவைக்குக் கை வந்த கலைதானே! முப்பது வருசமாச் செய்த தொழில் எல்லே. நல்ல அனுபவம் இருக்கும். துல்லியமா அணுவளவும் பிசகாமல் செய்யலாம். பழுது வராது. குறி வைச்சுப் பிடிச்சமாதிரி இருக்கும். ஆனால் ஒண்டு மட்டும் எனக்கு விளங்கேல்லை. உவங்கடை திருகுதாளம் முன்னம் சீஐடிக்கு வடிவாத் தெரிஞ்சும் ஏன் உவங்களைப் பிடிச்சு அடைக்காமல் விட்டவங்கள் ?

**- கோளரங்கன்**

## புனைவின்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் அவர்கள் மொழியில் வணக்கம் சொன்னேன். ஆப்பிரிக்க வணக்க முறை நீண்டு நீண்டு போகும். அவற்றை மனனம் செய்திருந்தேன். அவரும் சொல்ல நானும் சொன்னேன். இப்படியே ஒரு ஐந்து நிமிடம் ஆனது. உள்ளே ஒரு நாய் படுத்திருந்தது. அதன்மேல் ஒரு குழந்தை படுத்து உறங்கியது. நாயும் உறங்கியது. உறங்காமல் காட்சியளித்தது அவர் ஒருவர்தான். வாயிலே கோலாநட்டை சப்பியபடியே நின்றார். சும்மா கிடந்த நாற்காலியில் உட்காரலாம் என்ற யோசனை அவருக்கு இன்னும் தோன்றவில்லை'

பார்சலை இலங்கைக்கு அனுப்பியபிறகு அது போய்ச் சேராது என அவ நம்பிக்கையுடன் அவர் இருந்தபோது எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அது சென்றடைந்ததற்கான உறுதிக் கடிதம் வந்தபோது 'அவருக்கு ஆச்சரியமாகி விடுகிறது. ஒரு சிறு சம்பவம்தான் என்றாலும் அதை ஒரு சுவாரஸ்யமான கதையாக மாற்றி தான் ஒரு தேர்ந்த கதைசொல்லி என்பதை நிரூபிக்கிறார் அ.முத்துலிங்கம்.

'நிலம் என்னும் நல்லாள்' சிறுகதையில் சைமனுக்கு கல்யாணத்துக்காக பார்க்கும் பெண்ணை இப்படி அறிமுகம் செய்கிறார் 'ஒரு கத்திபோல பற்கள் பளிச்சிட்டன. நல்ல உணவாலும் தேகப் பயிற்சியாலும் அடுத்தவேளை உணவு எங்கேயிருந்து வரும் என்ற கவலை இல்லாததாலும் தோலுக்கு அடியில் ரத்தம் வேகமாக பாய்ந்து அவள் சருமம் வர்ணிக்க முடியாத படிக்கு ஒரு மினுமினுப்பை அடைந்திருந்தது. அந்தப் பெண் வந்தபோது அம்மா அறிமுகம் செய்து வைத்தார். ஒரு வேலைக்காரனுக்கு கொடுக்கும் புன்னகை அவளிடமிருந்து வெளியே வந்தது. வெள்ளை வெளேர் என்ற மெழுகு போன்ற கால்களுக்கு மேல் உடம்பிலிருந்து எதிர்ப்பக்கமாக விரிந்த ஆடை அணிந்து, குதிக்கால் சப்பாத்தில் இடறி இடறி நடந்தாள்'


போர்ச்சூழலில் இருந்த சைமனுக்கு கனடாவின் சொகுசு வாழ்க்கை வெறுப்பையே தந்தது. அவன் வீட்டைவிட்டு வெளியேறி சென்றதைச் சொல்லும்போது, 'காலையில் பார்த்தால், முதல் நாள் சலவை செய்து ஸ்திரி போட்டு, ஒரு சுருக்கம்கூட இல்லாமல் இழுத்து செருகப்பட்ட தூய வெள்ளை விரிப்பில் படுத்திருந்த மகனை காணவில்லை' வீட்டிலிருந்து வெளியேறிய சைமன் வெளியே விழும் கடும்பனியில் சிக்கி உயிரைவிடும் சோகத்தை சொல்லும்போது அ.முத்துலிங்கம் அவருக்கே உரித்தான நடையில் துயரத்தை அழுத்தமாகப் பதிவிடுகிறார்

'யாழ்ப்பாணம் மயிலிட்டியில் பிறந்து, முள்ளிவாய்க்காலில் தப்பி, தாய்லாந்தில் உத்தரித்து, ரொறொன்ரோ வந்து சேர்ந்த சைமனின் பனிமூடிய உடல் ஸ்காபரோவில் அடக்கம் செய்யப்பட்டது' பெற்ற மகனாலும் உறவுகளாலும் புறக்கணிக்கப்பட்ட முதியவள் சூஸனின் தனிமைத் துயரங்களையும் இறுதியில் அவள் முதியோர் இல்லம் செல்வதையும் நெகிழ்ச்சியாக சொல்லியிருக்கிறார் 'இலையுதிர்காலம்' சிறுகதையில். கதையின் இறுதியில் சூஸன் தன் கையில் சூட்கேசுடன் தான் வாழ்ந்த வீட்டை விட்டுச் செல்லும்போது அந்நிகழ்வை அ. முத்துலிங்கம் விவரிப்பது துயரம் தோய்ந்த நிதர்சனம்.

'பெரிய விருட்சம் ஒன்று சுருங்கிச் சுருங்கி மறுபடியும் விதையானது போல நாலு அறை, நிலவறை, மாடி கொண்ட பெரிய வீட்டு சாமான்களைச் சுருக்கி 20 கிலோவாக சூட்கேசில் அடைத்து வைத்திருந்தார். அது பக்கத்தில் ஒரு ஆள் போல இரண்டு சில்லுகளில் நின்றது' தொகுப்பின் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு மாறுபட்ட களங்களைக் கொண்டு படிக்கும் வாசகர்களுக்குப் பல்வேறுபட்ட அனுபவங்களை வழங்குகிறது. இக்கதைகளினூடே நாம் பல்வேறு அயல்தேசத்து விபரங்களைத் தெரிந்து கொள்கிறோம். அ.முத்துலிங்கத்தின் கதைகள் வாசகர்களின் ரசிப்புத் திறனை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்பவை. ஒரு சில கதை தொகுப்புகளில் அதில் உள்ள அனைத்து கதைகளுமே சிறப்பானவைகளாக அமைந்துவிடுவதுண்டு. அப்படியான கதை தொகுப்புகளில் ஒன்றுதான் இந்த 'பிள்ளை கடத்தல்காரன்' கதைத்தொகுப்பு.

■ பகலவன்

# தமிழருக்குப் புதிதல்ல...!




'இடுக்கண் வருங்கால் நகுக", என்றார் வள்ளுவர். தொடர்ச்சியாக துன்பம், யுத்த சூழல் என்றே இருந்ததால், அனர்த்த முகாமைத்துவத்தில் கைதேர்ந்தவர்களாக விளங்கினர் தமிழர். யுத்தம் பல்வேறு வகையிலும் அவர்களை ஆற்றலுள்ளவர்களாக மாற்றிவிட்டது. இதனால்தான் சுனாமி போன்ற மனிதப் பேரவலத்தின் பிடியில் இருந்து மிக விரைவில் சுதாகரிக்க முடிந்தது. உலகிலேயே மிக வேகமாக மீட்புப் பணிகள் தமிழரின் நிர்வாகப் பகுதியிலேயே (குறிப்பாக புலிகளின் நிர்வாகத்தில் இருந்தவை) நடைபெற்றன.

கடல், வான், தரை என மூன்று வழியிலும் தாக்குதல்களை எதிர்கொண்ட போதும், அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த அனுபவம்தான் 'இதுவும் கடந்து போகும்" என்ற ஞானநிலையை முள்ளிவாய்க்கால் வரை ஏற்படுத்தியது. தொடர்ந்து முகாம் வாழ்க்கையின் துன்ப, துயரங்களையும் எதிர்கொள்ள முடிந்தது. இவ்வாறான நிலையை சிங்களவர்களோ, முஸ்லிம்களோ எதிர்கொண்டிருப்பார்களாயின் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாமல் போயிருக்கலாம்.

இன்று நாடு முழுவதும் பாதுகாப்புப் பிரச்சினை தொடர்பாக முடிவெடுப்பதில், சகலரும் திணறுகின்றனர். இது புதிய விடயம் என்பதால் சிங்களவரும் முஸ்லிம்களும் எதிர்கொள்வதை சிக்கல்களைச் சந்திக்கின்றனர். ஏற்கனவே மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே பாதுகாப்பு என்ற பெயரில் எல்லா அவஸ்தைகளையும் அனுபவித்தவர்கள் தமிழர்கள். ஆனாலும் தளரவில்லை. அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதில் சிரித்திரன் சஞ்சிகை குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளது.




அக்காலத்தில் சிரித்திரன் சுந்தர் அட்டைப்படமாக ஒரு கேலிச்சித்திரத்தை வரைந்திருந்தார். அவர் படைத்த பாத்திரங்கள் அதில் காணப்படுகின்றன. கோவணத்துடன் போகிறார் மெயில்வாகனத்தார். அவரிடம் 'மெயில்வாகனத்தார் குளிக்கப் போறியளோ...", எனக் கேட்கிறார் சவாரித்தமபர்.

'இல்லை... கொழும்புக்குப் போறன். வழியில் எல்லாம் திறந்து பார்க்கிறார்களாம்... அது தான் இப்படி...", என்று பதில் சொல்கிறார் மெயில்வாகனத்தார். நாளாந்தம் இந்த அவஸ்தையை தமிழர்கள் அனுபவிப்பதனால் தான் அவரின் மனதில் வித்தியாசமான நகைச்சுவை உணர்வு ஏற்பட்டது. அதன்பின் இதனை சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ள இந்தக் கேலிச்சித்திரமும் ஒருவகையில் உதவியது எனலாம்.

வசாவிளான் மகா வித்தியாலத்துக்குள் இராணுவம் பிரவேசித்து விட்டது என்ற செய்தி வந்தது. எல்லோரும் இராணுவ நெருக்கடி பற்றி சிந்திக்கையில் இவரது கேலிச்சித்திரம் இயல்பு நிலைக்குப் போக வைத்தது. 'பள்ளிக் கூடத்துக்கை ஆமி வந்திட்டுதாம்...", என்று ஒருவர் சொல்ல, 'சந்தோசம்... சகோதரங்களுக்கு இப்பவாவது படிக்கிற ஆசை வந்ததே...", என்று மற்றவர் சொல்கிறார். இவ்வாறாக பல்வேறு நடவடிக்கைகளுக்கும் இவர் பாணி வெவ்வேறான விளக்கங்களைக் கொடுத்தது.

*1986 - 1987* காலகட்டத்தில் ஒருநாள் குண்டுவீச்சு விமானங்கள் நகரை வட்டமிடத் தொடங்கின. இவரது மகள் இவரை அழைத்துக் கொண்டுபோய் இவர்களது காணிக்குள் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிக்குள் விட்டார். விமானங்கள் தமக்கிட்ட கடமையை செவ்வனே நிறை வேற்றி (தமிழருக்கு உயிரிழப்பு, சேதாரம்) விட்டு சென்று விட்டன. இதன் பின் இவர் பதுங்குகுழியில் இருந்து வெளியில் வந்தார். அடுத்த சிரித்திரன் இதழ், அட்டைப்படம் இச்சம்பவத்தை மையமாக வைத்து வெளியானது. ஒரு சாத்திரியாரிடம் ஒருவர் தனது பலனை அறிய கையை நீட்டுகிறார். சாத்திரியார் சொல்கிறார், ' செல்வம் அனுபவிக்கும் பலனில்லாத சாதகன்", என்று. அதற்கு அவர், 'உண்மைதான் சாத்திரியார் மாடி வீடு கட்டிவிட்டு பதுங்குகுழியில இருக்கிற பலன்", என்று சொல்கிறார். (காங்கேசன்துறை வீதியில் இருந்த இவரது இல்லம் மாடி வீடுதான்)

இப்போது எழுந்துள்ள சோதனைகள் எல்லாம். தமிழருக்குப் பழக்கமானவையே இதனையும் வழமைபோலவே பார்க்கின்றனர். சமூகவலைத் தளங்களில் ஒரு கவிதை உலா வருகிறது. அதற்கு விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. அப்படியே தருகிறோம். எழுதியவர் யார் எனத் தெரியவில்லை. சோதனை விடயங்களில் நல்ல அனுபவஸ்தர் என்று மட்டும் புரிகிறது.

**ஒரு பை வேணும்**

ஐயா பை ஒன்று தாங்கோ
படு கறுப்பும் வேண்டாம்
பஞ்சவர்ணத்திலும் வேண்டாம்
பின்னுக்கு கொழுவுறதும் வேண்டாம்
பெரிதாயும் வேண்டாம்
ஆகச் சிறிதாயும் வேண்டாம்
ஆங்கிலம் அரபு
எழுத்துப்போட்டதும் வேண்டாம்
இழுத்துப் பூட்டுறதும் வேண்டாம்
ஆக ஓவெண்டும் வேண்டாம்
அப்பட்டமாய் உள்ளே எல்லாம்
அம்பலத்தில் தெரியிற மாதிரி
புட்டோ இடியப்பமோ
போண்டாவோ இட்டலியோ
கட்டிய பார்சலும்
தட்டிப்பார்க்காமலே
தரணிக்கே தெரியும்படியாய்
ஒரு தட்டி மறைப்பு இல்லாமல்
குஞ்சம் கொடிகள் இல்லாமல்
குறிகள் குற்றுக்கள்
பறவைகள் மிருகங்கள் இல்லாமல்
வெறுமனே ஒரு பை
திறந்து பார்க்காமல்
கொடிகாமத்திலிருந்து பார்த்தால்
கைதடி சந்திக் கைப்பையில்
அடியில் இருக்கின்ற
அரை இஞ்சி ஊசியும்
தெளிவுறக் காண்பதுவாய்
ஐயா ஒரு பை வேணும்
இல்லையெனில்
தையல் கூலி ஒரு
ஐந்து பத்து இலட்சம்
ஆனாலும் பரவாயில்லை
உள்ளே இருப்பதை
உலகமே பார்க்கும் படியாய்
மெய்யாய் ஒரு பை வேணும்
இப்போதைக்கு இதுபோதும்
இனியும் நாளை ஏதுமென்றால்
எனக்கும் என் மனையாளுக்கும்
பைபோல
ஒரு கவுணும் காற்சட்டையும்
தைத்து உதவவேணும்
இனியாரும் குண்டை
கொண்டைக்குள் காவி வந்தால்
மறுநாள் மக்கள் அனைவருக்கும்
மண்டை மட்டும்தான் இருக்கும்
மசிர் இருக்காது
**இண்டைய நாட்டு நிலைமையில்**
**இப்படித்தான் யோசிக்கவேணும்.**

தொகுப்பு :- சி.விமலன்






# பரிசுத் தொகை அதிகரிப்பு

இந்தாண்டு நடைபெறவுள்ள கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பரிசுத்தொகை கடந்த வருடம் வழங்கப்பட்ட பரிசுத் தொகையை விட 11.8 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மொத்தப் பரிசுத் தொகையின் பெறுமதி 38 மில்லியன் பவுண்ஸ்களாகும். ஆனாலும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளைப் பொறுத்தவரையில் அதிக பரிசுத் தொகை அமெரிக்க ஓப்பன் தொடரிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. கடந்தவருடம் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் தொடரின் மொத்தப்பரிசுத் தொகை 53 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

அந்த வகையில் இந்த வருட விம்பிள்டன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டிகளில் சம்பியன் பட்டம் வெல்பவர்களுக்கு தலா 2.45 மில்லியன் பவுண்ஸ்கள் வழங்கப்படவுள்ளது. இது கடந்த வருடம் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சம்பியனுக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகையை விட ஒரு லட்சம் பவுண்ஸ்கள் அதிகமாகும். அத்தோடு ஒற்றையர் பிரிவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் சுற்றுகளுக்குத் தகுதிபெறும் வீரர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகையும் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு முதற்சுற்றோடு வெளியேறும் வீரர்களுக்கு 45000 பவுண்ஸ்கள் வழங்கப்படவும் உள்ளது. இந்த வருட விம்பிள்டன் போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதவி மாற்றம் வருமா?



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவராக இன்சமாம் உல் ஹக் 2016 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அக்குழுவின் அதியுயர் சாதனையாக 2017 சம்பியன்ஸ் கிண்ணத்தை பாகிஸ்தான் கைப்பற்றியமை விளங்குகிறது. ஆனாலும் கடந்த ஒன்பது மாதங்களில் பாகிஸ்தான் அணி ஆசியக் கிண்ணப் போட்டிகள், தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடர் என்பவற்றை இழந்ததோடு அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் வெள்ளையடிப்பும் செய்யப்பட்டது. அவரது பதவிக்காலம் கடந்த ஏப்ரல் மாதத்துடன் முடிவுக்கு வந்தாலும் உலகக் கிண்ணத்தைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் ஜுலை மாதம் வரை அவருக்கு நீடிப்பு வழங்கப்பட்டது.

தற்போது பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் விளங்கி வரும் நிலையில் கிரிக்கெட்டின் வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டி வருகின்றார். அந்தவகையில் சமீபத்தில் நடைபெற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் இன்சமாமை தேர்வுக்குழுத் தலைவர் பதவியில் இருந்து நீக்கி விட்டு வேறு பதவியைக் கொடுப்பதற்கு பேச்சுவார்த்தை நடந்துள்ளது. இது குறித்த இறுதி முடிவை இன்சமாம் இன்னமும் அறிவிக்கவில்லை. ஆனாலும் உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகளைப் பொறுத்தே அவர் தேர்வுக் குழுத் தலைவராக நீடிப்பாரா? அல்லது வேறு பதவிக்கு மாற்றப்படுவாரா? என்பது உறுதியாகத் தெரியவரும்.

# புதிய தொடர்




இருபதுக்கு 20 போட்டிகளுக்கான மவுசு உலகெங்கும் அதிகரித்துள்ள நிலையில் விரைவில் 'யூரோ இருபதுக்கு 20 ஸ்லாம்' என்ற தொடர் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தொடரின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக இந்திய அணியின் முன்னாள் வீரரான திலீப் வெங்சர்கார் மற்றும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான வசீம் அக்ரம் ஆகியோர் விளங்குகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளான அயர்லாந்து, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து நாட்டு வீரர்கள் ஏனைய நாடுகளின் முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்களோடு இணைந்து விளையாடி அவர்களது அனுபவங்களைப் பெற்று தமது திறமைகளை வளர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே இந்தத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் அயர்லாந்தின் டப்ளின், பெல்பாஸ்ற் நகரங்களையும் ஸ்கொட்லாந்தின் எடின்பேர்க், கிளாஸ்கோ நகரங்களையும் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம், ரோட்டர்டாம் நகரங்களையும் தளமாகக் கொண்டு ஆறு அணிகள் உருவாக்கப்படவுள்ளன. ஆனாலும் போட்டிகள் டப்ளின், எடின்பேர்க், ஆம்ஸ்டர்டாம் ஆகிய மூன்று நகரங்களிலேயே நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அணியிலும் 6 உள்நாட்டு வீரர்களும் 5 வெளிநாட்டு வீரர்களும் இடம்பெறவுள்ளார்கள். இத்தொடர் எதிர்வரும் ஆவணி மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 22 வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகுதியிழப்பு



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டத்தைப் பெறுவதற்கு அணிகள் கங்கணம்கட்டி விளையாடினாலும் அது சாத்தியமாகாத சந்தர்ப்பத்தில் குறைந்தது புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களுக்குள்ளாவது வரவேண்டும் என்பதில் குறியாக இருக்கும். காரணம் அடுத்த பருவகால சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடருக்குத் தகுதி பெற வேண்டுமாயின் முதல் நான்கு இடங்களுக்குள் வருவது அவசியமாகும். அந்தவகையில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி அடுத்த பருவகால சம்பியன்ஸ் லீக் தொடருக்குத் தகுதி பெறவேண்டுமாயின் கடந்தவாரம் நடைபெற்ற ஹடர்ஸ்பீல்டு அணிக்கெதிரான போட்டியில் வெற்றி பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் இந்தப் போட்டி 1 : 1 என்று சமநிலையில் முடிந்ததால் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி தற்போது புள்ளிப்பட்டியலில் 6 ஆம் இடத்திற்குத் தள்ளப்பட்டதோடு அடுத்த பருவகால சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்கும் தகுதியையும் இழந்துள்ளது. அதேவேளை மன்செஸ்ரர் சிற்றி, லிவர்பூர், செல்சி, ரொற்றின்காம் அணிகள் அடுத்த பருவகால சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்கும் தகுதியைப் பெற்றுள்ளன.

# மன்னிப்புக் கோரல்

கடந்தவாரம் வட அயர்லாந்தின் பெல்பாஸ்ற் நகரத்தில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் கென்யாவின் ஜோயல் கொஸ்ரானி பந்தயத் தூரத்தை 2 மணி 18 நிமிடங்கள் 40 செக்கன்களில் ஓடி முடித்து முதலிடம் பெற்றார். அதுபோல பெண்கள் பிரிவில் கென்யாவின் கரோலின் ஜெப்றிச்சர் பந்தயத் தூரத்தை 2 மணி 36 நிமிடங்கள் 38 செக்கன்களில் ஓடி முடித்து முதலிடம் பெற்றார். ஆனாலும் போட்டி முடிவடைந்த பின்னர் தான் பந்தயத் தூரம் நிர்ணயிக்கப்பட்டதை விட 0.293 மைல்கள் அதிகமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

சர்வதேச மரதன் போட்டிகள் 26.2 மைல்கள் தூரம் கொண்ட போட்டியாகவே நடைபெறுவது வழக்கம். ஆனால் இந்தப் போட்டி 26.493 மைல்கள் தூரம் கொண்டதாகக் காணப்பட்டமை தெரியவந்துள்ளது. இதையடுத்து போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் 'இது மனிதர்களின் தவறாலேயே நடைபெற்றது. தூரத்தை அளப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட முதன்மையான கார் உத்தியோகபூர்வமான ஓடுபாதைத் தளத்தில் இருந்து திசைமாற்றம் செய்யப்பட்டதாலேயே இந்தத் தவறு நடைபெற்றது. இந்தத் தவறுக்காக மன்னிப்புக் கோருகின்றோம். எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாவண்ணம் ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்' எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் மரதன் ஓட்டப்போட்டிகளின் தூரத்தில் தவறுகள் ஏற்படுவது இது முதன் முறையல்ல. 2013, 2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மன்செஸ்ரரில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டிகளின் தூரம் வழமையான தூரத்தை விட 380 மீற்றர் குறைவாக இருந்தமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு வெற்றியாளர்களின் சாதனை நேரங்கள் செல்லாது என அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 11.05.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.